64

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
பரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 வரு செப்டம்பர் மீ 10உ [No. 36

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)	701
2.	கம்பராமாயணம் (கங்கைப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L.	703
3.	ஆண்டாள்—(கல்வியும் கவித்திறமையும்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L.	706
4.	சிதம்பரதேவர் சரிதம் Dr. V. S. அருணாசலம்பிள்ளை	708
5	சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம் - 110—118) K. இராமரத்நம் ஐயர் B.A.	710
6.	மல[illegible]னம்—விதியில்லா மதிபாலன் "மதுகரம்"	712
7.	[illegible]பில[illegible]கணம் (ஆசிரியப்பா)	716
8.	வர்த்தமானம்.	719

கலாநிலயம்

188934

மறுப்பது முறுதியாமே 1.

இரஷ்யாவின் சோவியத் அதிகாரிகள் தாம் காணாது இன்புற்றதைப் பிறருங் காணாது இன்புறும் பொருட்டுத் தலைப்பட்டிருக்கும் இயக்கமொன்றினை இவ்விதழ்களில் வேறோரிடத்திற் காணலாம். தற்காலத் தமிழ் நாட்டினர்க்கு இது வொன்றும் புதுமையன்று. கடவுள் தலையிலேயே கைவைக்க வந்தாரே இப்பாவியர் எனக் கழறுவார், வைவார், கருத்தழிந்து மாழ்கவும் மாழ்குவார் ஒரு சாரார். மற்றொருசாரார், "ஆம், இப்பொழுது கடவுளின் ஒழிவே வேண்டற்பாலது. பல் பெருங்காலமெல்லாம் இருந்திருந்த அம்முழுமுது கடவுள் நமக்கு யாது செய்தது. கையாலொன்று மாகாத இழுதைகளே அதனைப் போற்றி வந்தனர். அரசனைக் கொன்றழித்த அந்த இரஷ்யர்களுக்குக் கடவுளையுங் கொன்றொழித்தல் இயல்வதாகும். அன்னவர் முன்னேற்றத்தைப் பின்னின்று பார்த்திருக்கும் நம் இந்தியத் தலைவர்களும் இளைப்பரோ!" எனச் சில இயம்புவார். அவ்விருதிறத்தோரும் ஒன்றுசேர்ந்தும் மன்பதைத் தொகுதியில் மிகச்சிறு பகுதியே யாவார். கடவுள் இருப்பதற்கும் இல்லாததற்கும் யாதும் பேதமின்றி ஒழுகுவதே இவ்வுலகத்தின் பெரும்பாலோர் செய்தி.

அவனன்றி ஓரணுவும் அசையாதென்பது சரதம். கடவுளைச்சிலர் மறுக்கின்றாரெனில், அதுவும் அவனே தன்னை மறுக்கவைத்துக் கொண்டாலல்லாமல் இயலுமோ! படைப்பினைய அவனது தொழில்களை அலகிலா விளையாட்டென்றேனும் கொள்க; கருத்துமுற்றிய கருமமென்றேனுங் கொள்க. அவைகளை அவனியற்றும் வழியினை யாரறிவார்? சிறு மாநுடர் சோதித்தறியவல்ல முறைகளெல்லாம் கடந்த நெறியினன் அவன். நெறியினை அறிந்துகொள்ள இயலாமையால் இறைவனே இல்லை என்று மறுத்துவிட முயல்கின்றது பேதை மனம். இம்முயற்சி இயல்வதொன்றன்று. கடவுள் இல்லை என்று நினைக்க முயல்கின்ற நினைவே அவனிருக்கும் உண்மையை நிலைநாட்டுகின்றது. கடவுள் இல்லையென்று கதறப்புகும் நாவே அவன் உண்மையை உறுதிசெய்கின்றது. இவ்விடயமாக, லிப்னீஸ், ஸ்பைனோஸா, காண்ட், அனைய மேனாட்டுத் தத்துவஅறிஞர் சிலர், நுண்ணிதின் ஆய்ந்துரைத்த கொள்கைகளை அயலயல் தொகுத்துக் காட்டியுள ஆங்கிலக் கட்டுரையொன்றை இதன் கீழ் வரைகின்றோம்:—

PROOF OF THE EXISTENCE OF GOD.

The view of Leibniz, expressed in the *Monadology* must be carefully distinguished from the Cartesian argument (derived from Anselm) that the idea of God involves His existence, because if He does not exist, a more perfect Being may be conceived, namely one who does exist. It is also to be distintinguished from the view of Spinoza, which amounts to saying that the essence of God involves His existence, because all essence exists, all that is possible is actual. As againt Descartes's proof Leibniz argues that it is incomplete, for the idea of a most perfect being might perhaps be self-contradictory, like the idea of the swiftest possible motion or the greatest possible number. Thus, after stating the Cartesian argument,

N31.9.36

Leibniz says: 'But it is to be noted that the only logical conclusion is: "If God is possible, it follows that He existr". For we cannot safely use definitions in order to reach a conclusion, until we know that these definitions are real or that they involve no contradiction. The reason of this is that from notions which involve a contradiction opposite conclusions may be drawn at the same time, which is absurd. To illustrate this I usually take the instance of the swiftest possible motion, which involves an absurdity. For, suppose a wheel to revolve with swiftest possible motion, is it not evident, that if any spoke of the wheel be made longer' [*produced*, in the mathematical sense] 'its extremity will move more swiftly than a nail on the circumference of the wheel! wherefore the motion of the circumference is not the swiftest possible, as was supposed by the hypothesis. Yet at first sight it may appear that we have an idea of the swiftest possible motion; for we seem to understand what we are saying, and nevertheless we have no idea of impossible things.' *Meditationes de Cognitione, Veritate et Idea.* 'Therefore there is assuredly reason to doubt whether the idea of the greatest of all beings is not uncertain, and whether it does not involve some contradiction. For I quite understand, for instance, the nature of motion and velocity, and what "the greatest" is. But I do not understand whether these are compatible, and whether it is possible to combine them into the one idea of the greatest velocity of which motion is capable. In the same way, although I know what "being" is, and what the "greatest" and the "most perfect" are, nevertheless I do not therefore know that there is not a hidden contradiction involved in combining these together, as there actually is in the instances I have just given ... Yet I admit that God has here a great advantage over all other things. For in order to prove that He exists, it is sufficient to prove that He is possible, which is not the case with regard to anything else that I know of... Simple forms [i. e. living principles] are the source of things. Now I maintain that all simple forms are compatible with one another. . . . If this be granted, if follows that the nature of God, which contains all simple forms taken absolutely, is possible. Now we have proved above that God, is provided He is possible. Therefore He exists.' Thus Leibniz, as he himself says, holds a middle position between those who regard the Cartesian proof as a sophism and those who say that it is a complete demonstration. God's existence, for Leibniz, follows immediately from His possibility, for all real possibility includes a tendency to existence, and there can be nothing to hinder this tendency in a being supposed to be perfect. In the *Reponses aux Deuxiemes Objections*, Descartes maintains the possibility of the idea of a most perfect being. But he does not make this a prominent or essential part of his proof, as Leibniz does.

In the *Animadversiones in partem generalem Principiorum Cartesianorum* Leibniz suggests that the argument might be simplified by omitting the reference to 'perfection,' and merely saying 'a necessary Being exists—or a Being whose essence is existence, or Being in itself exists—as is evident from the terms. Now God is such a being (from the definition of God), therefore God exists. This argument holds if it be granted that a necessary being is possible and does not involve a contradiction, or, what is the same thing, that the essence from which existence follows is possible.' Elsewhere Leibniz points out that 'those who hold that from notions, ideas, definitions or possible essences alone we can never infer actual existence...deny the possibility of being in itself' [*ens a se*]. But 'if *being in itself* is impossible, all beings through another' [*entia ab alio*] 'are also impossible, since indeed they are only through *being in itself*: thus nothing can exist.'

As against Spinoza, Leibniz's argument would be that not all that is possible is actual, but only the compossible or compatible. There are unrealized 'possibles,' essences which do not involve existence, and consequently the necessary being, whose essence involves existence, is not the all, but is something distinct from the world of created things. The essence of a created being does not involve its existence, because it is limited, and thus its existence depends upon its 'fitting into' other essences so as to constitute, along with them, the best possible world. But the essence of a necessary being involves its existence because it is unlimited. There is nothing to hinder or condition its existence, and accordingly, if it be possible, it must exist. The value of Leibniz's argument depends on the worth of the distinction he makes between 'possible' and 'compossible,' that is to say between a metaphysical or absolute necessity and a moral or inclining necessity. How are these two kinds of necessity related to one another? It is hardly a satisfactory solution of the opposition between them to refer the one to the understanding and the other to the will of God. We have here again the fundamental weakness of Leibniz's philosophy, the uncertainty of the relation between the principle of contradicton and that of sufficient reason.

Kant rejects the whole argument as a paralogism, on the ground that 'existence' can never be a predicate, that is to say, that we are never justified logically in passing from a mere idea to the existence of its content. See *Critique of Pure Reason*, Rosenkranz, ii 462; Hartenstein, ii. 456; Meiklejohn's Tr., 364.) It is true that we can never pass from a mere idea to the existence of its content; but to adduce this as an argument here is to beg the question. For a mere idea is an idea of that which may be non-existent, while the idea of a necessary being is the idea of that which cannot be non-existent. Gaunilo in his *Liber pro insipiente*, anticipates the objection of Kant, and to this Anselm replied in his *Liber apologeticus contra respondentem pro insipiente*, saying, among other things: 'Let us assume that the *Summum cogitiable* need not exist merely because it is thought. Mark the consequence. That which can be thought without really existiting would not, if it did exist, be the *Summum cogitabile*; so that, by the hypothesis, the *Summum cogitabile* is and is not the *Summum cogitabile*, which is in the last degree absurd.'

இத்துணையும் மொழிபெயர்த் தெழுவது இய லாது. இடமதிகங் கவர்ந்துவிடும். ஆங்கிலங் கற்றார் எமது நண்பர்கள் அம்ஃதறிந்தவர் உதவியால் பொருள் தேர்ந்து கொள்ளும்படி வேண்டுகின்றோம். அன்றி யும், இனி இக்கட்டுரை தொடரும்போது ஆங் காங்குவரும் சில குறிப்புக்களால் இவ்வாங்கில மேற் கோளின் பிண்டப்பொருள் யாதெனும் ஒருவாறு தெரிந்துவிடும். "கடவுள் என்ற ஒன்று இருக்க இயலுமாயின், அக்காரணத்தினாலேயே அது இருப் பது உண்மையும் ஆதல் வேண்டும்," என்று நுண்ணி தின் ஆய்ந்து சாதிக்கின்றனர் அத்தத்துவச் செல்வம் வாய்ந்த செவ்வியோர்.

சென்னை-600 006

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம் — 6. கங்கைப் படலம்.

[696-வது பக்கத் தொடர்ச்சி.]

கங்கையிற் சிறந்ததோ கோதா விரியே.

வரநதி கங்கையின் கரைக்கு இராமனோடிருவரையும் இனிது நடத்திச்செல்கின்றார் கம்பர். அரசிழந் தகலும் ஒருவனைப்போல் இராமன் தோன்றினானலன். உயிரனைய மனைவியோடும் அன்புடைய தம்பியோடும் கோசலத்தின் புதுமைகளைக் கண்டுமீள உலாப்போகு மொருவன் உவகையும் ஊக்கமும் அவன்பால் விளங் கின. இச்செலவைக் கம்பர்பிரான் பொருளும் ஓசை யும் பொலிந்த பாசுரங்கள் சிலவற்றால் பாடுகின்றார்:-

வெய்யோனொளி தன்மேனியின்
விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு
மிளையானொடும் போனான்
மையோமர கதமோமறி
கடலோமழை முகிலோ
வையோவிவன் வடிவென்பதொ
ரழியாவழ குடையான்

[இவன் வடிவு மையோ மரகதமோ புரளுங்கடலோ கரு மேகமோ, என்னே என்னே! என்பதற்குரிய அழியாத அழ குடைய இராமன், சூரியனது ஒளி, தன் மேனியிலிருந்து விரிகின்ற ஒளியினால் மழுங்கி மறையும்படி, இவளுக்கு இடை உண்டென்பதெல்லாம் பொய்யோ என்று எண்ணு தற்குரிய நுண்ணிய இடையுடைய சீதையோடும், தம்பி இலக்குமணனோடும் போனான்]

அவ்வண்ண மேகு நெறியில்,

அளியன்னதொ ரறறுன்னிய
குழலாள்கட லமிர்தின்
தெளிவன்னதொர் மொழியாணிறை
தவமன்னதொர் செயலாள்
வெளியன்னதொ ரிடையாளொடும்
விடையன்னதொர் நடையான்
களியன்னமு மடவன்னமு
முடனாடுவ கண்டான்

[வண்டுகளை யொத்ததாய்க் கருமணல் அடர்ந்திருப்பது போன்ற கூந்தலையுடையவளும், திருப்பாற்கடலில் வந்த அமிர்தத்தின் தெளிவுபோன்ற இனிய மொழிகளைப் பேசு பவளும், நிறைந்த தவம்போன்ற தூய்மையுடைய செய்கை களைப் புரிபவளும், ஆகாயத்தைப்போன்ற இடுப்பை உடை யவளுமான சீதையோடுகூடி, இரஷபத்தைப்போன்ற நடை யையுடைய இராமன், களிப்பு மிகுந்த ஆணன்னமும் இளமையுடைய பெண்ணன்னமும் சேர்ந்து ஆடுவதைக் கண்டான்]

இதனைக் கண்டபோது இராமனுக்குப் பண்டை நினைவுகள் சில எழுந்தனபோலும். முன் கோசிகமுனி வனோடு மிதிலைமாநகர் புக்கநாள், சதகோடி மின் சேவிக்கும் மின்னேபோல் இச் சனகன்மாமகள் பொ[illegible]பவந்த கன்னிமாடத் தும்பரின்மாடே கழிபே [illegible]டன[illegible]ட்மாடும் முன்துறை கண்டங் கயல்நின்ற [illegible]வினிடை இராமன் ஆழ்ந்திருக்க,

[illegible]ம்பையு மையன்றன தலகம்பையு மளவா
நஞ்ச[illegible]ளை வெல்லாகிய நயனங்களை யுடையாள்
[illegible]ஞ்சுங்களி வரிவண்டுகள் குழலின்படி சுழலும்
கஞ்சங்களை மஞ்சன்கழ னகுகின்றது கண்டாள்.

[மன்மதனது ஐந்து பாணங்களையும் இராமனது கூரிய அம்பையும் அளந்துகடந்து விஷத்தையும் வெல்கின்ற கண்களுடைய சீதை, களிப்புப் பொருந்தியதும் வரிகளை யுடையதுமான வண்டுகள் தன் கூந்தலைப்போல் சுழன்றி ருந்த தாமரை மலர்களை இராமனது பாதங்கள் பரிகசித்துச் சிரிப்பதைப் பார்த்தாள்.]

கஞ்சங்களை மஞ்சன்கழல் நகுகின்றது கண்டாளே யன்றிப் பதின்மூன்று வருடங்களுங்கப்பால் கோதா விரி நதிக்கரையில்,

ஓதிம மொதுங்கக் கண்ட
உத்தம னுழைய ளாகுஞ்
சீதைதன் னடையை நோக்கிச்
சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவ டானு மாண்டு
வந்துநீ ருண்டு மீளும்
போதக நடப்ப நோக்கிப்
புதியதோர் முறுவல் பூத்தாள்.

[அன்னப்பறவை விலகக்கண்ட இராமன், அருகிலுள்ள சீதையின் நடையைப் பார்த்துப் புன்னகை புரிந்தான். அச் சீதையும், அங்குவந்து நீருண்டு மீளும் ஆண்யானை நடப் பது நோக்கி, அது இராமனுக்குத் தோற்று அகல்கின்ற தெனப் புதியதோர் புன்னகை புரிந்தனள்]

என்னும்படி இங்கு எதிரெதிர் இவர் முறுவல்பூத்த முகத்தோடும் வியந்துநிற்காமல்,

மாகந்தமு மகரந்தமு மளகந்தரு மதியின்
பாகந்தரு நுதலாளொடு பவளந்தரு மிதழான்
மேகந்தனி வருகின்றது மின்னோடென மிளிர்பூண்
நாகந்தனி வருகின்றது பிடியோடென நடவா

[மிக்க வாசனையும் மகரந்தமும் படிந்த கூந்தலுடைய பிறைச்சந்திரன்போன்ற நெற்றியையுடைய சீதையுடன், பவளம்போன்ற உதடுகளையுடைய இராமன், மின்னலோடு வருகின்ற மேகம்போலவும், பிரகாசிக்கின்ற ஆபரணங்களை யணிந்த யானை தன் பிடியோடு வருவதுபோலவும் நடந்து]

தொளைகட்டிய கிளைமுட்டிய
சுருதிச்சுவை யமுதின்
கிளைகட்டிய கருவிக்கிள
ரிசையிற்பசை நறவின்
விளைகட்டியின் மதுரித்தெழு
கிளவிக்கிளி விழிபோற்
களைகட்டவர் தளைவிட்டெறி
குவளைத்தொகை கண்டான்

[தொளையிட்ட புள்ளாங்குழலினின்று எழும் இசையாம் செவிச்சுவை யமுதம் போலவும், நரம்புகட்டிய யாழின் இசைபோலவும், பசுந்தேன் வார்த்து வளர்த்த கரும்புக்கட் டியைப்போலவும் இனிமைவாய்ந்து எழுகின்ற மொழிகளை யுடைய கிளிபோன்ற சீதையின் கண்களைப்போல், களை பிடுங்குபவர் பறித்து எறிகின்ற குவளை மலர்களின் தொகு தியை இராமன் கண்டான்]

அருப்பேந்திய கலசத்துணை யமுதேந்திய மதமா
மருப்பேந்திய வெனலாமுலை மழையேந்திய குழலாள்
கரும்பேந்திர முதலாயின கண்டாளிடர் காணாள்
பொருப்பேந்திய தோளானொடு விளையாடினள்

[போனாள்

[அரும்பைத் தாங்கியுள்ள இரண்டு பொற்கலசங்களோ, அல்லது, அமுதத்தையுட்கொண்ட மதயானையின் தந்தங்களோ என்னத்தக்க முலைகளையும், மேகம்போன்ற கூந்தலையும்உடைய சீதை, தனக்குற்ற இடரொன்றையும் தெரிந்து கொள்ளாதவளாய், கரும்பாலை முதலியவைகளைப் பார்த்துக் கொண்டே, மலைபோன்ற தோள்களையுடைய இராமனுடன் சென்றாள்.

பன்னந்துக டாளங்தொகு படர்பங்கப நன்னீ
ரன்னந்துயில் வதிதண்டலை யயனந்துறை புளினஞ்
சின்னந்தரு மலர்சிந்திய செறிநந்தன வனநன்
பொன்னந்திய நதிகண்டுள மகிழ்தந்தனர் போனார்.

[பல சங்குகளிலிருந்து உருண்ட முத்துக்கள் திரண்டுளே படர்ந்த தாமரைகளையுடைய நீர்நிலைகளையும், அன்னம் துயில்கின்ற சோலைகளையும், பக்கத்தில் சங்குகள் தங்குகின்ற மணல்மேடுகளையும், சின்னங்களாக அணிதற்குரிய மலர்கள் உதிர்ந்து அடர்ந்த நந்தனவனங்களையும், நல்ல பொன்னை ஒதுக்குகின்ற நதிகளையுங் கண்டு மனம் மகிழ்ந்தவராய்ப் போயினார்]

கால்பாய்வன முதுமேதிகள்
கதிர்மேய்வன கடைவாய்ப்
பால்பாய்வன நறைபாய்வன
மலர்வாயளி படரச்
சேல்பாய்வன கயல்பாய்வன
செங்கான்மட வன்னம்
போல்பாய்புனல் மடவார்படி
நெடுநாடவை போனார்

[கதிர் மேய்ந்ததால் கடைவாயிலிருந்து பால் பெருகுவனவாகிக் களிப்புடன் கால்களால் பாய்கின்ற முதிய எருமைகளையுடையதாய்த் தேன் பாய்கின்ற மலரிற்படிந்த வண்டுகள் பறந்தெழும்படி கயலும் சேலும் பாய்கின்ற ஓடும் நீரில், சிவந்த கால்களையுடைய மட அன்னம்போல் மாதர்கள் முழுகுகின்ற பெரிய கோசலநாட்டிடங்களைக் கடந்து சென்றார்.]

இவ்வண்ணங் களிமிகத் துளங்குங் கருத்தினராய்க் கண்ட காட்சிகளிற் றம்கண்கள் பெருக விளையாடிச் சென்று, மருதவைப்பின் வளமிகுந்த நாடுகளைக்கடந்து விரிதிரைப்புனல் கங்கையைமேவினார்.மேவுதலும், அத் தெய்வமாநதிக்கரையில் வைகியத போதனர், தங்கள் செல்கதி வந்ததென் றேமுற்று அங்கண் நாயகனைக் காணவங் தண்மி,

பெண்ணி ளேக்குஞ் சுவையிற் பிறர்பிறர்க்
கெண்ணி ளேக்கி யியம்பரு மின்பத்தைப்
பண்ணி ளேக்கும் பராவமு தைப்பசுங்
கண்ணி ளேக்கின ருள்ளங் களிக்கின்றார்

[தென்உண் தேனின் தீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம் அனைய சீதாபிராட்டியாலும் வியந்து மகிழ்ந்து நோக்கப்படும் ஓர் சுவையானவனும், மனத்தால் எண்ணி அவரவர் துய்ப்பதல்லால், பிறர் பிறருக்கு வார்த்தைகளால் விளம்பிக்காட்ட இயலாத இன்பமானவனும், பண்ணமைந்த வேதங்களுக்கு இலக்கான பரஅமிர்தம் ஆனவனும் ஆகிய இராமனைத் தம் குளிர்ந்த கண்களால் நோக்கி உள்ளம் களிப்பவராயினார்.]

அன்னதோர் அருந்தவமுனிவர்க்கு விருந்தினனாகிய இராமன், அவரளித்த காய்கனி இலைகளை இனிதுண்டு இருக்குமவ் வேளையில் குகனெனும் பெயர் வேட்டுவக் குரிசில் அங்குவந் தரிதின் எய்தினன். வருமிவன் தோற்றமும் வணக்கமும் கனிந்த சிந்தையனாய் இராமன்பால் கொண்ட அன்பும், பின் னிராம னவனோடு தோழமை பூண்டதுமன்றி அவனைத் தன்னுடைத் தம்பியர் மூவரில் நால்வனாக்கிய உறவின் தகைமையும், கம்பர் நம் கருத்தெலாம் கவரவல்லதோர் கலைபொலியுமொரு சித்திரத்தால் செவ்விதின் தீட்டிக் காட்டுகின்றார். வழியெலாம் கண்டுவந்த காட்சிகளின் இனிமையே சுரந்த கருத்தனைத்தும் சுவைத்திருக்க விளையாடிச் சென்று முனிவரரியற்றிய விருந்தருந்தி விளங்குவானாகிய இராமபிரான் திருமுன்னர் நாவாய் வேட்டுவ நாயகனைக் கம்பர்பெருமான் கொணர்கின்றார். குகன் பூண்ட அன்பும் அதனால் பெற்றபேறும் மிகப் பெரியவை. ஆயினும், உகந்தவனை ஏற்றுக்கொண்ட இராமனுக்கு மோர் இலாபம் இல்லாமற் போயிற்றிலது. உடன்பிறந்தார் தொகை அவனுக்கு அதிக மாயிற்று. பதியினை இழந்த இராமன் புதியதோர் தம்பியை விரைவி னெய்தினன். வான்மீகத்தின்படி குகனது வரவிலேனும் பிரிவிலேனும் யாதும் குறிக்கொளத் தக்க சிறப்பில்லை. கங்கைக்கரை சேரும்வரையில் சுமந்திரன்தேர் இராமனோடு இலக்குமணனையுஞ் சீதையையுங் கொணர்ந்து விடுகின்றது. அப்பொழுது தன் உயிர்த்தோழனாகிய குகன் வருவது கண்ட இராமன் இலக்குமணனோடும் எதிர்சென்று ஏற்கவும் இராமனது தவக்கோலம் கண்ணுற்ற குகன் துயர் மிகக்கூர்ந்து கட்டியணைத்துத் தாழ்ந்த தன் பணிவினைச் செப்பித் தான் கொணர்ந்த பல்வகை உணவுகளை அருந்தும்படி வேண்டிநிற்க, இராகவனக் குகனை எதிருறத் தழுவி அவன் நலத்தினோடு அவன் இனத்தினர் நலத்தையும் வினவி, "நான் மரவுரிதரித்து மான் தோல் உடுத்து, வனத்திற் கனிகளையும் கிழங்குகளையும் புசித்து, தரும மொன்றிலேயே கருத்தைச் செலுத்திக் காட்டில் வசிக்குந் தவசியாக இருக்கின்றேன்; ஆகையால், எனக்கு வேண்டுவது குதிரைகளுக்குப் புல் ஒன்றுதான்; மற்றவைகளி லொன்றும் எனக்கு வேண்டாம்'' என்று மறுத்து, இளையோன் கொணர்ந்த நீரையே உணவாக உட்கொண்டு சீதையோடும் அங்கோர் பாசடைப் பள்ளியெய்தினன். அன்னகாலையில் புறங்காத்திருந்த இலக்குவனோடு உரையாடிய குகன், சத்தியத்தின்மேல் ஆணைவைத்து, "இராமருடைய அருளினால்தான் இவ்வுலகத்தில் நான் மிக்க புகழையும் தருமத்தையும் பொருளையும் அடைய வேண்டுகின்றேன்...ஆகையால் நானே, சீதாதேவியுடன் படுத்திருக்கும் உயிர்நண்பரான இராமரைக் கையில் விற்பிடித்தவனாய்ச் சுற்றத்தார்களுடன் எவ்விடத்தும் பாதுகாப்பேன்'' எனத் தன் நட்பின் நோக்கத்தை விளம்பினனாய் உறுதி கூறுவதும், இலக்குவன், தன் முன்னோன் எளிமையையும் மன்னவன் நிலைமையையும் அயோத்தியின் அவலத்தையும் உன்னியுன்னிப் பலவாறு புலம்புவதுமாய் நாழிகைநடக்க வைகறையில் இராமன்,"காமத்தை விளைக்கும் இரவு பெரும்பாலுங் கழிந்தது; அருண னுதிக்குந் தருணமுங் கிட்டியது' என்பதுணர்ந்து, குகனைக்கொண் டோர் மரக்கலம் கொணர்வித்து, சுமந்திரனுக்கும் குகனுக்கும் விடைகொடுத் தனுப்பிவிட்டு, மற்றிருவரோடும் கங்கையாற்றின் மறுகரை சேர்ந்தனன்.

இந்தக் கதையல்லால் மனுகுலப் புதல்வனும் வேட்டுவத்தலைவனும் உறவுகொண்ட செவ்வியில் உற்ற சுவையொன்றும் வான்மீகிமுனிவர் உணர்த்தவில்லை. இதன்மேல் நிகழ்வன சில, நாம் முன் கம்பருடைய

அவையடக்கத்தின் இரகசிய மிதுவெனக் கற்பித்த பொருளை உறுதிசெய்ய வல்லவை:—

கங்கையைக்கடந்த மூவரும் வத்ஸநா டடைந்து மாலைசூழ்ந்ததும் பசியுடைய இராமஇலக்குமணர், சீதையை ஒரு மரத்தடியில் இருக்கவைத்து, "பன்றியும், ரிசியம் பிருஷதம் குரு என்னும் மூன்றுவித மானினங்களையும் விரைவிற் கொன்றெடுத்துக்கொண்டு, வசிப்பதற்காகச் சீதையைவிட்ட அம்மரத்தைநாடியடைந்தனர்'' என்கின்றார் வடநூல் முனிவர்.எனின் "நான் மாம்ஸத்தை நீக்கிக் காய் கிழங்கு தேன் இவைகளை உணவாகப் புசித்துக்கொண்டு மனுஷசஞ்சாரமற்ற காட்டில் பதினன்கு வருடம் வசிக்கப்போகிறேன்'' என்று இராமன் அன்று கோசலைக்குக் கூறியது முற்றிலும் அவள் இரக்கத்தைத் தூண்டுதற்கே போலும். பின், "இரவும் பகலும் மரத்திலிருந்து விழுங் கனிகளைப் புசித்து ஐம்புலனை யடக்கி வேறொன்றை நினைக்கும் ஆசையற் றிருக்கவேண்டும். ஆகையால் காட்டில் துன்பம் வெகு அதிகம்''எனச் சீதைக்குரைத்ததும் அவளை அச்சுறுத்தற்கே ஆதல் வேண்டும். இவைகளைநம்பிக் கோசலை, "நன்றான வியஞ்சனத்துடன் கூடிய உணவைப் புசிப்பவளாகிய சீதை காட்டிலுண்டாகிய செந்நெலினாலாகிய உணவை எவ்வாறு புசிப்பாள்'' என்று இரங்கியதும் வீண். இடைப்பிறவரலாய இது ஆவதாகுக. இராமன் மரத்தடி அடைந்தபின் நிகழ்ந்ததை வான்மீகிமுனிவரே வழங்கட்டும்:—

"எல்லா ருள்ளங்களையும் மகிழ்விப்பவர்களிற் சிறந்தவரான இராமர், அம்மரத்தை யடைந்து, சாயங்கால சந்தியாவந்தனத்தைச் செய்த பிறகு, லக்ஷ்மணரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார்:—"இப்பொழுது, காட்டில் நமக்குச் சுமந்திரரின்றி யிருக்கும் முதலிரவு வந்தது. இவ்விரவில் நீ வருந்துதல் தக்கதன்று. லக்ஷ்மணா, இன்று முதல் இரவுகளில் நாமிருவரும் சோம்பலின்றிக் கண் விழித்திருக்கவேண்டும்; ஏனெனில், சீதையின் யோகக்ஷேமம் நம்முடைய அதீனத்தி லிருக்கின்றதன்றோ! சுமித்திரையின் புதல்வனே, இவ்விரவைக் கஷ்டப்பட்டே கழிப்போம்; நாமே தேடிக்கொண்டுவந்த புற்களையும் பூமியிற் பரப்பி அதிற் படுப்போம்'' என்று இவ்விதமாகச் சொல்லி, சிறந்த படுக்கையிற் படுக்கத்தக்க இராமர், வெறுந்தரையில் படுக்கையைச் சித்தஞ்செய்த பிறகு, வீற்றிருந்து, லக்ஷ்மணரைப் பார்த்து, அழகிய இவ்வார்த்தைகளைச் சொல்லலானார்:—"லக்ஷ்மணா, மகாராஜர் இப்பொழுது துயரத்துடன் தூங்குவார்; நிச்சயம். மனோரதங்கள் கைகூடப்பெற்ற கைகேயி, சந்தோஷமடைய உரியர். தேவியான அக்கை கேயியார், ஊரினின்று வந்த பரதனைப் பார்த்து, அவனுக்கு இராச்சியம் நிலைப்படும் பொருட்டு, மகாராஜருடைய உயிரை வாங்காமலிருப்பாரா?

"அநாதரும், முதியவரும், என்னாலும் பிரியப்பெற்றவரும்,காமனுக்கு ஆட்பட்டவரும்,கைகேயியின் அதீநத்திலிருப்பவருமான தந்தையார், என்ன செய்வார்! நாம் காட்டிற்படும் இத்துக்கத்தையும், அரசருடைய புத்திமயக்கத்தையும் ஆலோசித்துப் பார்த்து, "அர்த்தம் தருமம் இவைகளைவிடக் காமமே பலம் உள்ளது'' என்ற புத்தி எனக்கு உண்டாகின்றது. லக்ஷ்மணா, என்னை என் தந்தை கைவிட்டதுபோல், எந்த மூடமனிதன் தன் இஷ்டப்படி நடக்கும் புதல்வனை ஒரு ஸ்திரீயின்பொருட்டுக் கைவிடுவான்? கைகேயியின் புதல்வனான பரதன், தன் மனைவியோடு கூடியவனாய், சந்தோஷத்தை யடைந்துள்ள கோசலநாட்டை மகாராஜாவைப்போல் தான் ஒருவனாய்ச் சுகமாக அநுபவிக்கப் போகின்றானே! என் தந்தை பிராயஞ்சென்றவரா யிருக்க, நானும் காட்டில் வசித்திருக்கையில்,அப்பரதனே எல்லா இராச்சியத்துக்கும் பிரதானனவான். எவன் தருமார்த்தங்களைக் கைவிட்டுக் காமத்தைப்பற்றுகிறானோ,அவன்,தசரதமன்னவரைப் போல் விரைவில் ஆபத்தை யடைகின்றான். யாகஞ்செய்யவுரியவனே, தசரதருடைய மரணத்திற்கும் என்னைக்காட்டுக்கு ஓட்டுதற்கும் பரதனுக்கு இராச்சியத்தைக் கொடுப்பதற்குமே கைகேயி வந்தாரென்று எண்ணுகிறேன். செல்வச் செருக்கினால் மோகமடைந்த கைகேயி, என் பொருட்டுக் கோசலையையும் சுமித்திரையையும் வருத்தாதிருப்பரா? லக்ஷ்மணா,என்பொருட்டுச் சுமித்திராதேவியார், துயரப்படவேண்டாம்; நீ இங்கிருந்து அயோத்திக்குக் காலையிலேயே ஏகுவாய். நான் ஒருத்தனாகவே சீதையுடன் தண்டகாரணியத்துக்குப் போகிறேன்; அநாதையான கௌசலைக்கு நீ தலைவனாவாய்.அற்பத்தொழிலுடைய கைகேயியார் பகைமையால் அநியாயஞ் செய்வாரன்றோ! ஆகையால், தருமத்தை யுணர்ந்தவனான 'பரதனிடத்தில் என்னுடைய தாயை அடைக்கலமாகக் கொடுப்பாய்.

லக்ஷ்மணா, கோபங்கொண்டுவிட்டால், நானொருவனே, பாணங்களால் அயோத்தியையும் உலகமுழுவதையும் ஆக்கிரமிப்பேன்; ஆயினும், தருமமல்லாத தொழிலில் பராக்கிரமத்தைச் சாதனமாகக் கொள்ளக்கூடாதன்றோ! மாசற்றவனே, அதருமத்தாலுண்டாகும் லோகாபவாதத்திற்கு அஞ்சின நான், மறுமைக்கு அஞ்சுவதால், இப்பொழுது என்னைப் பட்டாபிஷேகம் பண்ணிவைத்துக் கொள்ளவில்லை'.'

ஏனோ இத்துணை வன்மம். பன்றியொடு மானினத்தின் ஊன் விளைத்த வேகமோ இஃதென எவரேனும் எண்ணலாமென் றஞ்சிய கோவிந்தராஜர்,இலக்குமணன் நகரிற்கு மீளுமாறு உரைத்த யுக்தியேயன்றி இராமன்தயரதனையுங் கைகேசியையும் நிந்திப்பதற்கே இவை பேசினவனாகான் என வியாக்கியானம் வரையவிரைகின்றார். பரதனே தன் அன்னை கோசலைக்குப் போதிய காப்பாவான் என்று நம்பாத நிந்தனையும் கோவிந்தராஜரது கருத்தின்படி கழிந்துவிடும். மற்று, இவ்வமைதியைக் கொள்ளுதற்கோ வோர் ஐயமுளது. ஏனெனில், "லக்ஷ்மணா, இன்றுமுதல் இரவுகளில் நாமிருவரும் சோம்பலின்றிக் கண்விழித்திருக்கவேண்டும்'' என்று துவக்கியபோது இலக்குவனை அன்றேடு அகற்றிவிடும் சிந்தனை இராமனுக்கு இல்லை என்று எண்ணுவது முறைமை. மேலும், காமுகன் என்றும் அறிவிலி என்றும் தந்தையை வைவது அவன் தனக்கொரு இடர்செய்த கோபத்தால் நேர்ந்ததென்பதற் கியற்கையாகுமே யல்லாமல் இலக்குவனைப் போக்குதற்கு வேண்டியதுமில்லை; இயற்கையுமில்லை. இப்படித் தான் இவ்வளவுதூரம் வந்து, சுமந்திரனும் மீண்டு,கங்கையுங்கடந்து, வத்ஸநாட்டையும் அடைந்தபின், பழிக்கலாகாக் குரவரைப் பழுதுபடப் பழித்தேனும் இலக்குவனை விலக்குதற்குப் புதியதாய் நிமித்தம் யாது விளைந்ததோ! தன்னை நன்னாடு தோற்பித்த தாய்தந்தையர்மேல் வெஞ்சின மூண்டதால் வசைகளைப் பொழிந்த நாவின் கடுமைக்குத் தானே சிறிதுவெட்கிப் பிறகு இலக்குவனைப் போக்குமோர் குறிப்பை இராமன் பூசினனென்றால் ஒருகால் அது ஒவ்வத்தக்கதாகுமோ,யாதோ! அமையத்திற்கேற்றபடி சிறிது திரித்துரைக்கும் ஆற்றல் இராமனுக்குளதென் பதை முன்னரே வான்மீகிமுனிவர் காட்டியிருக்கின்

ளூர். அயோத்தியினின்று புறப்பட்ட தேரினைத் தாங் கருந் துயரினேடுந் தொடர்ந்த தயாதன், அத்தேரை நிறுத்துமாறு சுமந்திரனைக் கூவுதலும், இராமன், "ஒட்டுங்கள், ஓட்டுங்கள், ஆலோசியாமல் இரதத்தை ஓட்டுங்கள். தாங்கள் திரும்பி வந்தபின், "என்சொற்படி ஏன் தேரை நிறுத்தவில்லை', என்று வேந்தன் பழித்தாலும், 'தங்கள் பேச்சு எனக்குக் கேட்கவில்லை' என்று பதில் சொல்லுவீர்கள்" என்றோர் தந்திரம் கற்பித்தானல்லனே?

தொல்புகழ்த் தூய்மைவாய்ந்த கங்கைமா நதியிலா டிக்கடந்தநாள் இவ்வண்ணம் வாய்கயப்புறக் கைகேசியைக் கழறிய இராகவன் அற்றைக்குப் பதின்மூன் ருண்டுகளுக்குப்பின்னர்க் கோதாவரி நதிக்கரையில் வைகியபோது, இலக்குவன் பரதனைப் பலவாறு புகழ்ந்து, "உலகத்தில் மனிதர்கள் சிறப்பாகத் தம் தந்தையர் குணத்தைக் கொள்ளாமல் தாயர்களின் குணத்தையே கொள்கின்றார் என்று பிரசித்தமாக வழங்கிவரும் உலக வசனமானது பரதரிடம் பொய்யாகிவிட்டது. தசரத மன்னரை நாயகராகவும் பரதரைக் குமாரராகவும் உடைய நமது தாய் கைகேயிக்குமட்டும் இந்தக் கொடிய எண்ணம் எவ்விதமாக உதித்தது" என்ற அம்மெல்லிய வசைக்கே ஆற்றாமல், "தம்பீ, நீ நமது இளையதாயான கைகேசியை ஒருபோதும் நிந்திக்கலாகாது" என்றிராமன் தகைந்தானென்பதும் வான்மீகத்தில் காணப்படும். இம்மாற்றத்தினை, இத்துணை காலம் தவவேடம் பூண்டிருந்ததால் பண்பட்ட இராமனது மனத்தின் செம்மைக்குச் சான்றாக்கலாமெனினும்,படிந்தோரைப் புனிதராக்கும் மேன்மையில் கங்கையிலும் நல்லதோ கோதாவரி என்னுஞ் சிந்தையே சிறந்தெழுகின்றது. இத்தகைய பேருதவி செய்யவல்லது சான்றோர் கவி. ஆதலாற்றானே, "புவியினுக்கணியாய்" என்று தொடங்குமச் செய்யுளில் கம்பர்பெருமான், சான்றோர் கவிக்குக் கோதாவரியினைச் சிலேடையாக்கினர். விருந்தகங்கை என்னும் பெயர் இந்நதிக்குத் தகும்.

ஆண்டாள்

2. கல்வியும் கவித்திறமையும்.

[690-வது பக்கத் தொடர்ச்சி]

ii பாலை. *

ஆண்டாள் பதிகங்களில் பாலைத்திணையின் உரிப்பொருளாகிய† பிரிவும் பிரிவின் நிமித்தமும் கூறுங்கால் ஆங்காங்கு அஃறிணைப் பொருள்களைக் "கேட்குன போலவும்,...இயங்குனபோலவும்" இவ்வம்மையார் பாடும்‡ பரிசு காணலாம். இத்துடன் நில்லாமல் தன்னை மணந்திடுமாறு கனவில் வந்த அச்சுதனை, காளையென்னும் $ பட்டத்தால் மொழிகின்றார். பாலை நிலத்தில் உயர்ந்தோனைக் காளையென்பர் மேலோர். ஏனெனில் அத்தகைய திருமணம் நடலைவாழ்வின் அழிவாகுமென்பது பற்றியே.

இக்கருத்துக் கொண்டே பாஞ்சசன்னியத்தை, "பகைத்துடியாய்த்" தீய அசுரரையும், நடலையையும் ஒன்றாய் அழிக்க, * ஊழியான் கைத்தலத்து வந்ததென்றார்.

ஆண்டாள் பதிகங்களினுள்ள பாலைத்திணை யிலக்கணம் பற்பல துறைகளில் உருவகமாய் விளங்கும். 2-வது திருமொழியில் சிறுமியர் மாயனைத் தம்சிற்றில் சிதையேலெனப் பாடிய பதிகத்திலும் பாலைமணமே கமழ்கின்றது. † கடலையடைத்து அரக்கர்குலங்களை முற்றவும் செற்று இலங்கையைச் சாம்பலாக்கிய சேவகன் "விடலை மீளியே யாம். விண்ணுற நீண்டு மூவுலகும் ஈரடியா லளந்து மாவலியைத் தொலைத்த ஸ்ரீதரன், சிற்றிலோடு சிந்தையையும் சிதைக்கவோ புன்முறுவல் காட்டினன்" என்பர். ‡ இரணியனை

* கன்னி விடலை காளை மீளி
யின்னகை யெயிற்றி யெயின ரெயிற்றியர்
மறவர் மறத்தியர் புறவுபருந் தெருவை
கழுகு செந்நாய் கல்கெழு குறும்பு
குழிவறுங் கூவல் குராஅ மராஅ
உழிஞை பாலை யோமை யிருப்பை
வழங்குகதி கொண்டன செழும்பதி கவர்ந்தன
பகைத்துடி பாலையாழ் பஞ்சுரம் வெஞ்சமம்
பகற்குறை யாடல் பாலைக் கருப்பொருளே.

இலக்கணவிளக்கம் 389.

† புணர்தலும் பிரிதலும் இருத்தலு மூடலும்
இரங்கலும் இவற்றின் நிமித்தமும் எனவாங்
கெய்திய வுரிப்பொரு ளையிரு வகைத்தவை
யோரிரண் டோரிரண் டுரைத்தவைந் திணைக்கு
நேரு மென்மனூர் நெறியுணர்ந் தோரே.

ஷை 393.

‡ என்புருகி யிளவேல் நெடுங்கண்க
ளிமைபொருந் தாப்பல நாளும்
துன்பக்கடல் புக்குவைகுந்த னென்பதோர்
தோணிபெ றாதுழல் கின்றேன்
அன்புடை யாரைப் பிரிவுறு
நோயது நீயுமறிதி குயிலே !
பொன்புரை மேனிக் கருளக்
கொடியுடை புண்ணியனை வரக் கூவாய் !

5-வது திருமொழி (குயிற்பத்து) 4.

$ நாளை வதுவை மணமென்று நாளிட்டுப்
பாளை கமுகு பரிசுடை பந்தற்கீழ்ப்
கோளரி மாதவன் கோவிந்த னென்பானோர்
காளை புகுதக் கனக்கண்டேன் தோழிநான்.

6-வது திருமொழி (வாரணமாயிரம்) 2.

* கடலில் பிறந்து கருதாது பஞ்சனன்
உடலில் வளர்ந்துபோய் ஊழியான் கைத்தலத்
திடரில் குடியேறித் தீய வசுரர்
நடலைப் படமுழங்கும் தோற்றத்தாய் நற்சங்கே.

7-வது திருமொழி (கற்பூரநாறுமே) 2.

† 2-வது திருமொழி (நாமமாயிரம்) 6-வது செய்யுளில் [3 - 4 - வரி.

‡ முற்றத்தூடு புகுந்து நின்முகம்
காட்டிப்புன் முறுவல்செய்து

பழித்தது $ சிசுபாலனை யொழித்தது ¶ இராவண கும்பகர்ண சம்மாரம் செய்த × இவையும் பாலைத்திணையேயாம். கஞ்சனை வதைத்ததும் மாவலியை படக்கியதும் இஃதேயாம். இந் நிலத்தின் உயர்ந்தோன் செய்கையும் ஆறலைத்தலும் சூறைகோடலுமாகையால், அத்தொழிற் செய்தியே இந்நிலச்செய்தியாகும். அதை ஆண்டாள் ஆத்ம விசாரணையாய் உருவகப்படுத்துவதைக் காண்க:—

காவிரிநீர் [
கைப்பொருள்கள் முன்னமே கைக் கொண்டார்,
செய்ப்புரள வோடும் திருவரங்கச் செல்வனர் !
எப்பொருட்கும் நின்றூர்க்குமெய்தாது நான்மறையின்
சொற்பொருளாய் நின்றாரெம் மெய்ப்பொருளுங்
[கொண்டாரே.

11-வது திருமொழி (நாமுகக்கும்) 6

இவ்வாறு உருவகத்தில் மாத்திரமன்றிப் பெரும்பொழுதும் சிறுபொழுதும் பாடுவதில் * முதுவேனிற்காலமும் நண்பகலும் ஒருவாறாகக் குறித்தவராய் † வேட்டையாடிவரும் விமலனை விருந்தாவனத்தில்ஆண்டாள் காட்டுகின்றார். நமது வாழ்நாளே புருஷோத்தமனைப் பிரிந்து நிற்பதாதலாலே, அத்தகைய பாலை யுரிப்பொருளை நீக்குவான் வழி யீதென்று 14-ம் திருமொழியின் திருக்கடைக் காப்புச் செய்யுளால் கோதையார் நன்கு விளக்கினர். ‡

iii. நெய்தல்

பிரிதலும் இரங்கலும் ஒன்றுக்கொன்று ஒற்றுமை பெற்ற வகையால் கோதையார் பாலைத்திணை வரையும் உணர்வைக் கண்டநாம் இனி, நெய்தலையும் காண்போம். நெய்தல்நில மெனப்படுவது கடலும் கடலைச் சார்ந்த இடமுமாம். இதற்குத் தெய்வம் வருணன். நடலையிற் கட்டுண்டு ஸ்ரீராமபிரான் வேண்டுகோளுக்கு வாராது, தண்டோபாயத்திற்கிணங்கி வழிவந்தவன்:—

பேதம்நன்கறி வார்களோடிவை
பேசினூற்பெரி தின்சுவை
யாதுமொன்றறி யாதபிள்ளைக
ளோமைநீநலிந் தென்பயன்
ஓதமால்கடல் வண்ணவுன்மண
வாட்டிமாரொடு சூழுறும்
சேதுபந்தம் திருத்திணையெங்கள்
சிற்றில்வந்து சிதையேலே. *

என்னும் செய்யுளில் கடலரசை யடக்கிய கடல்வண்ணனைப் பாடுகின்றார். இந்தக் கடல்வண்ணன் கடல் கடைந்து அமுதமெடுத்தவனுதலால், நம்முடல் கடைந்தும் ஞானத்தை மேலெழுப்புவனன்றோ? ஆதலால் இத்திணையிலும் ஆண்டாள் நடலையைப் பற்றியே முறையிடலானார்:—

கடலே கடலே உன்னைக்கடைந்து கலக்குறுத்து
உடலுட் புகுந்துநின் றூறலறுத்தவற் கென்னையு
முடலுட் புகுந்துநின் றூறலறுக்கின்ற மாயற்கென்
நடலைக ளெல்லாம் நாகணைக்கே சென்றுரைத்தியே †

இக்கருத்தமைத்தே பாஞ்சசன்னியத்தைப் பதுமநாபனேடும் சுற்றமாக்கிய பதிகத்தில் "இக்கடலிற் பிறந்த அச்சங்கு ¶ நடலைப் படமுழங்கும்" தோற்

‡ சிற்றிலோடெங்கள் சிந்தையுஞ் சிதைக்கக்
கடவையோ கோவிந்தா !
முற்றமண்ணிடம் தாவிவிண்ணுற
நீண்டளந்து கொண் டாயெம்மைப்
பற்றிமெய்ப்பிணக் கிட்டக்காலிந்தப்
பக்கம்நின்றவ ரென்சொல்லார்.

2-வது திருமொழி (நாமமாயிரம்) - 9.

$ அன்றின் னாதன செய்சிசு பாலனும்
நின்ற நீள்மரு தும்மெரு தும்புள்ளும்
வென்றி வேல்விறல் கஞ்சனும் வீழமுன்
கொன்ற வன்வரில் கூடிடு கூடலே.

4-வது திருமொழி (தெள்ளியார் பலர்) 7.

¶ கொண்டக் கோலக் குறளுரு வாய்ச்சென்று
பண்டு மாவலி தன்பெரு வேள்வியில்
அண்ட மும்நில னும்மடி யொன்றினால்
கொண்ட வன்வரில் கூடிடு கூடலே. ஷை-9.

× மாதலி தேர்முன்பு கோல்கொள்ள
மயனிரா வணன்மேல் சரமாரி
தாய்தலை யற்றற்று வீழத்தொடுத்த
தலைவன்வர வெங்குங் காணேன்
போதலர் காவில் புதுமலர் நாறப்
பொறிவண்டின் காமரம் கேட்டுன்
காதலி யோடுடன் வாழ்குயிலே
என்கரு மாணிக்கம் வரக்கூவாய்.

5-வது திருமொழி (மன்னு பெரும்புகழ்) 3.

* மாலாய்ப் பிறந்த நம்பியை
மாலே செய்யு மணாளனை
ஏலாப் பொய்க ளுரைப்பானை
இங்கே போதக் கண்டீரோ
மேலாய்ப் பரந்த வெயில்காப்பான்
வினதைச் சிறுவன் சிறகென்னும்
மேலாப் பின்கீழ் வருவானை
விருந்தா வனத்தே கண்டோமே.

14-வது திருமொழி (பட்டி மேய்த்து)-3

† நாட்டைப் படையென் றயன்முதலாத்
தந்த நளிர்மா மலருந்தி
வீட்டைப் பண்ணி விளையாடும்
விமலன் றன்னைக் கண்டீரோ
காட்டை நாடித் தேனுகனும்
களிறும் புள்ளு முடன்மடிய
வேட்டை யாடி வருவானை
விருந்தா வனத்தே கண்டோமே.

ஷை 9.

‡ பருந்தாட் களிற்றுக் கருள்செய்த
பரமன் றன்னைப் பாரின்மேல்
விருந்தா வனத்தே கண்டமை
விட்டு சித்தன் கோதைசொல்
மருந்தா மென்று தம்மனத்தே
வைத்துக் கொண்டு வாழ்வார்கள்
பெருந்தா ளுடைய பிரானடிக்கீழ்
பிரியா தென்று மிருப்பாரே.

ஷை 10.

அன்றியும்
"முல்லை குறிஞ்சிமரு தத்தொடு பாலை நெய்த லைந்துஞ்
சொல்லு மகமா மதனுக் குரைதொகு சட்டகமோ
டெல்லை நிகழு மிருபத்தோ டேழுள வினைய வற்
றெல்லை நிகழுமுரையு மறிந்துகொ ளொண்ணுதலே"
என்னும் வீரசோழியச் சூத்திரத் தாலு மறிக.

(வீர சோழியம்-பொருட் படலம் 4.

* 2-வது திருமொழி (நாமமாயிரம்) 7-வது செய்யுள்.
† 10-வது திருமொழி (கார்க்கோடல் பூக்காள்)
¶ (i) 9-வது செய்யுள்.
பதினாறு மாயிரவர் தேவிமார் பார்த்திருப்ப
மதுவாயில் கொண்டாற்போல் மாதவன்றன் வாயமுதம்

றத்தை உடையதென்றார். ஆகையால் ஆண்டாள் திருவாய்மலர்ந்த நெய்தல்நிலக் கருப்பொருள் யாவும் * இத்தகைய தொழிற்கே பயனுகின்றன. † சங்கே வளையாய்த் திருக்கரங்களிலிடப்பட்டன. ‡ கண்ணன் கவர்ந்தவைகளை அகப்பொருளிலக்கணமரபில் இன்னிசையில் ஆங்காங்குக் கோதையார் பாடலானார். அச் சந்தர்ப்பத்திலும் அத்திணைக்குரிய மரங்கள், புள், விலங்கு பூக்களையே மொழிவர். $

பொதுவாக உண்பதனைப் புக்குநீ யுண்டக்கால்
சிதையாரோ வுன்னோடு செல்வப் பெருஞ்சங்கே.

7-வது திருமொழி (கருப்பூரம் நாறுமோ).

(ii) பாஞ்ச சன்னியத்தைப் பற்ப நாபனோடும்
வாய்ந்த பெருஞ்சுற்ற மாக்கிய வண்புதுவை
ஏய்ந்தபுகழ்ப்பட்டர்பிரான் கோதைதமிழ் ஈரைந்தும்
ஆய்ந்தேத்த வல்லா ரவரும் அணுக்கரே.

ஷை 10.

* வருணன் சேர்ப்பன் விரிதிரைப் புலம்பன்
பருமவல்குற் பரத்தி நுளைச்சி
நுளையர் நுளைச்சியர் பரதர் பரத்தியர்
அளவ ரளத்தியர் லைகடற் காக்கை
சுறவம் பாக்கம் பெறலரும் பட்டின
முவர்நீர்க் கேணி கவாநீர் நெய்தல்
கண்டகக் கைதை முண்டக மடம்பு
கண்டல் புன்னை வண்டியிர் ஞாழல்
புலவுமீ னுப்பு விலைகளிற் பெற்றன
நளிமீன் கோட்பறை நாவாய் பம்பை
விளரியாழ் செவ்வழி மீனுப்புப் படுத்த
லுணங்கலை விற்றல்மீ னுணக்கல்புள் ளோப்ப
னெடுங்கட லாடனெய் தற்கருப் பொருளே.

இலக்கண விளக்கம்-392.

† உன்னோ டுடனே யொருகடலில் வாழ்வாரை
இன்னா ரினையரென் றெண்ணுவா ரில்லைகாண்
மன்னாகி நின்ற மதுசூதன் வாயமுதம்
பன்னாளு முண்கின்றாய் பாஞ்ச சன்னியமே.

7-வது திருமொழி (கருப்பூரம் நாறுமோ) 5

‡ மன்னு பெரும்புகழ் மாதவன் மாமணி
வண்ணன் மணிமுடி மைந்தன்
தன்னை யுகந்தது காரணமாகவென்
சங்கிழக் கும்வழக் குண்டோ
புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப்
பொதும்பினில் வாழுங் குயிலே
பன்னி யெப்போது மிருந்து விரைந்தென்
பவளவா யன்வரக் கூவாய்.

5 வது (மன்னு பெரும்புகழ்) திருமொழி-1.

$ "சுறவக்கொடி" மொழியும்போது கடலகமாகிய ... ராபதிப்பிரானைக் குறிப்பது காண்க ("தையொரு திங்கள்" என்னும் முதல் திருமொழி 4 வது செய்யுள்)

சிதம்பரதேவர் சரிதம்.

[686-வது பக்கத் தொடர்ச்சி]

7. விக்ரமசேனன்.

விக்ரமசேனன் தன்னரண்மனையில் இரகசியமான ஓர் அறையின்கண் உட்கார்ந்துகொண்டு, "ஏன் இன்னும் மஹாதேவர் வரவில்லை? விஜயசேகரனும் உடன் இருந்து கலந்து பேசவேண்டுமென்று எழுதியிருந்தானே! அவனையுங் காணவில்லையே! இராஜசபை கலைந்து ஏறக்குறைய நான்கு நாழிகை யாகிவிட்டதே!" என்று சஞ்சலமாயிருக்கையில் கதவைக் கடிதின் திறந்துகொண்டு மஹாதேவர் அறைக்குள் நுழைந்து கதவை மூடித் தாளிட்டுக்கொண்டு விக்ரசேனனிடஞ் சென்று, ஆசிகூறி அருகிலுட்கார்ந்து, "என் அண்ணலே! சீட்டெங்கே பார்ப்போம்" என்றார். விக்ரமசேனன் பெட்டியில் வைத்திருந்த சீட்டையும், வராஹ நாணயத்தையும் எடுத்து அவர்கையிற் கொடுத்து, "வாசித்துச் சொல்லும்" என்றான்.

"ஓ பிரபுவே! தங்களுத்திரவுப்படி யிவ்வெல்லையைக் காத்துவரும்போது இன்றைக்குப் பதினைந்து நாழிகைக்குமேல் இராஜவடிவமைந்த அதிதீர பராக்கிரமசாலிகளாய இரண்டு வாலிப புருஷோத்தமர்கள் இரண்டு பஞ்சகல்யாணிக் குதிரைகளின்மேல் ஆரோகணித்து ஆயுதபாணிகளாய் இவ்வெல்லையின் கீழ்த்திசையிலிருந்து வந்து, தம் வேஷத்தைமாற்றிக் குதிரை வியாபாரிகள்போல் உருக்கொண்டு மேற்றிசைநோக்கிப் பிரயாணப்பட்டதைப் பார்த்து நான் சந்தேகித்து அவர்களை அடுத்துப் பிச்சைகேட்டேன். அவர்கள் இந்தச்சீட்டில் வைத்திருக்கும் வராஹனையளித்துப் "பாலைவனம் இனியும் தூரமோ. குதிரைகளை வாங்குபவர்கள் அங்குளரோ?" என்று கேட்க, "ஆஹா! இருக்கிறார்கள், பாலைவனம் பதின்காதம்" என்றுரைத்து அவர்களையனுப்பிவிட்டு, அவர்கள்தம் செய்கைகளைத் தெரிந்துவரும்படி இரண்டுசேவகர்களைப் பின்னேயனுப்பி, மற்றிருவரை அவர்கள் வந்த கீழ்த்திசை போய் அவர்கள் விருத்தாந்தங்களை யறிந்துவரும்படி போக்கி இருக்கின்றேன். தங்கள் உத்திரவை எதிர்பார்த்திருக்கும்,"

ஊழியன்
விதூஷணன்.

'விக்ரமசேனரே, நீர்சொன்னது உண்மை,' என்று மஹாதேவர் கூறி, சீட்டையும் நாணயத்தையும் அவர் கையிற்கொடுத்துப் "பிறகு நடந்த விடயம் யாது?" என்று வினவ, நாலுநாட்களுக்குமுன் இவ்வூர் ஒற்றர்களிலொருவன்—அவ்விரண்டு வியாபாரிகளும் மேற்றிசையில் நதிக்கருகிலிருக்கும் சிறிய கிராமத்தில் ஓர் விடுதியில் இருப்பதாகவும், அவர்களுக்கருகாமையிலிருக்குங் கிருகத்தி லிரண்டுசேவகர்களைத் தலைவன் திட்டஞ் செய்து வைத்திருப்பதாகவும், விதூஷணன் சேவகர்கள், எனக்கிந்த வியாபாரிகள் ஊர் சேர்ந்திருக்குஞ் சங்கதி தெரிவிக்கச்சொல்லித் திரும்பினதாகவுஞ் சொன்னான். நல்லது ஜாக்கிரதை, யென்று மறுமொழி சொல்லி யனுப்பிவிட்டேன்" என்றார்.

மஹாதேவர் :—இந்த இரண்டு போர்ச் சேவகர்களால் நமது அரசனுக்குத் துன்பம் விளையுமா, இன்பம் கைகூடுமா?

விக்ரமசேனன் :—துன்பமில்லை சுகமே; ஆனால் பராக்ரமசேகரன் இவர்களை இன்னாரென்று தெரிந்து

கொள்ளாமல் காக்கவேண்டிய கடமை ஒன்று இருக்கின்றது.

மஹாதேவர் :—ஏன், என்ன விசேஷம்? பராக்ரமசேகரன் பார்த்தால் தன் வசப்படுத்தி அரசனுக்குத் துன்பம் விளைவிக்கக் கூடுமோ?

விக்ரமசேனன்:-வசப்படுத்தல் அவனாலியலுங் கருமமன்று; அத்துணைச் சாமர்த்தியமும் அவனுக்கில்லை. ஆயினும், இவ்வாலிபர்களுக்குத் துன்பம் விளைவிக்க முயலுவான் என்பதற் கையமில்லை.

மஹாதேவர் :—ஏன், அவர்கள்விஷயத்தில் தங்களுக்கு இத்துணைப் பச்சாதாபம்? அவர்கள் துன்பமனுபவித்தலில் நமக்குக் குறை யாது? நமது அரசனுக்கு எவ்வித மனக்குறையும் இல்லாதிருக்க வேண்டுவதன்றோ நமதெண்ணம்.

விக்ரமசேனன் :—"இதோ இதனையும் வாசித்துப் பாரும்," என்று தன் பெட்டியிலிருந்த மற்றொரு சீட்டை எடுத்து அவர்கையி லீந்தான்.

மஹாதேவர் சீட்டை வாங்கி வாசிக்கலாயினார்—"ஓ மஹாப்பிரபுவே! கீழ்த்திசை சென்ற சேவகர்கள் இன்று காலையில் திரும்பிவந்து; 'நமது சக்கரவர்த்தி நாட்டெல்லைக்கு முப்பது காததூரம் கீழ்த்திசையிலிருக்கும் மாளவதேசத்து இராஜபுத்திரர்கள்; அவ்வரசன் நமது இராஜாவின் புத்திரிகளின் விர்த்தாந்தங்களைக் கேள்விப்பட்டு, அவர்களைப்போல் இணைபிரிந்திருக்க ஆற்றாத தன் குமாரர்களுக்கு அவர்களை விவாகம் செய்துகொள்ள வேண்டும் என்றும், அதற்குப் பரிவாரங்களை யனுப்பித் தெரிவிக்குமுன் தன் குமாரர்களை முன்னரேயனுப்பி நேராக இராஜகுமாரிகளைப் பார்த்து அவர்கள் குணதிசயங்களை ஆராய்ந்து தெரிந்து வரும்படி மந்திரியால் தெரிவித்தபடியால் இவ்விருவரும் இப்படி மாறுவேஷம் பூண்டு தனியாய் வந்திருக்கின்றார்"

இங்ஙனம் ஊழியன்
விதூஷணன்.

மஹாதேவர் :—"இதிற் சந்தோஷமே தவிரச் சந்தேகிக்க இடமில்லைபோலிருக்கிறது. இனித் தங்கள் ஆக்கினைப்படி நடத்திக் கொள்ளுகின்றேன்," என்று மனமகிழ்ச்சியுடன் சொல்லித், "தேடப்போன கொடி காலிலகப்பட்டுக்கொண்டது; எல்லாம் சிவன்செயல்; நீர் சொன்னது தக்கதே. இவ்வாலிபர்களுக்கு யாதொரு மனக்குறையும் வாராமல் பார்க்கவேண்டியது அவசியமே" என்று கூறி முதன்மந்திரியைப் புகழ்ந்தார்.

விக்ரமசேனன்:—மஹாதேவரே! இனி நாம் இந்த விஷயத்தில் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. பராக்ரமசேகரனும் அவன் துஷ்ட குமாரர்களும் செய்யும் தீங்குகளை ஜாக்கிரதையாய்க் கவனித்துவாரும். நேற்று, மஹாராஜா தமது குமாரத்திகளுக்கு விவாகம் நடப்பிக்கவேண்டுமென்று ஆக்ஞாபித்தார். ஏதோ மங்களம் நடக்கும் போலிருக்கிறது. தங்களிடம் ஒப்புவித்திருக்கும் விஷயங்களிற் கொஞ்சமும் பிழையாமற் பார்த்துக்கொள்ளும்படி மறுபடியும் எச்சரிக்கின்றேன், போய்வாரும்.

மஹாதேவர்:—அப்படியே செய்கின்றேன். எப்படியிருப்பினும் நம் மனதிற்கு ஓர் ஆனந்த முளைத்தது. மிகவும் நன்மை, போய்வருகின்றேன்.

மஹாதேவர் சென்ற அரை நாழிகைக்கெல்லாம் கதவிடி கேட்டு, விக்ரமசேனன் போய்க் கதவைத்திறக்க, விஜயசேகரன் அறைக்குள்ளே நுழைந்து மந்திரியை வணங்க, அவரும் ஆசி கூறி விஜயசேகரனை அருகிலுட்காரவைத்துக் கதவைமூடி, "என்ன குழந்தாய், விசேஷ மேதேனு முண்டோ?" என்றார்.

விஜயசேகரன் :—மந்திரி சிரேஷ்டரே! என் பிதா முன்நடந்த விஷயங்களையெல்லாம் மறந்தவர்போல் காணப்படுகிறார். தமையன்மார்களும் விசேஷ முயற்சி செய்து வருபவர்களாய்த் தோற்றவில்லை. அரசனுக்கு ஓர் புத்திரன் பிறந்தாலொழியத் தாங்கள் செய்ய வேண்டியதொன்றுமில்லை என்றெண்ணியே யிருப்பதாய்த் தோற்றுகின்றது. இராஜபுத்திரிகட்கோ 'விவாஹத்தைக்குறித்து யாதொரு முயற்சியும் நடக்கின்றதில்லையே' என்று யோசித்துச் சும்மாவிருக்கிறார்கள். தங்கள் விசாரணையில் யாதேனும் புலப்பட்டதோ?' என்று விஜயன் கேட்க, விக்ரமசேனன், "அரசன் சபையில் உன் தகப்பனும் தமயன்மார்களும் கர்வமுகிகளாக இருக்கிறார்களே தவிர வேறு முயற்சி செய்பவர்களாய்த் தோன்றவில்லை. ஏதோ கடவுள்செயல் எப்படியிருக்குமோ தெரியாது. நீ ஹிரண்யனுக்குப் பிறந்த பிரகலாதனைப் போலும், இராவணனுக்குச் சகோதரனா யுதித்த விபீஷணனைப் போலும், இந்த மஹாபாபி பராக்ரமசேகரனுக்கு மகவாய்ப்பிறந்து அவனது வம்சம் கடைத்தேறச் செய்யவேண்டியவனாயிருக்கிறாய். பகவானை நினைந்து, நடப்பதை யெல்லாந் தந்திரமாய்த் தெரிந்து எனக்குத் தெரிவித்துக்கொண்டிரு; குழந்தாய்!" என்று அவனை அனுப்பிவிட்டான்.

அந்தச் சமயத்தில் ஓர் சேகவன் கொஞ்சந் தூரத்தினின்று மயில் கூவுவதுபோலச் சப்திக்க, விஜயன் தன் கண்மறைந்து போமளவும் அவனையே பார்த்து நின்ற விக்ரமசேனன், உள்ளே நுழைந்து கதவை அடைத்துக்கொண்டு அவ்விடத்திருந்த ஓர் மணியை மூன்றுமுறை கடார்கடாரென் றடித்துவிட்டு, இரகஸ்யமான ஓர் கதவைத் திறந்துவைத்து வருபவனை எதிர்பார்த்திருந்தான்.

அவ்வூரின் இரகஸிய சேவகத்தலைவன் உள்ளே நுழைந்து கதவைமூடிக்கொண்டு மந்திரியின் பாதத்தில் நமஸ்கரித்துப் "பிரபுவே! இந்த நான்கு நாளாய்த் தேவரீர் தரிசனம் அகப்படாமல் வருந்தினேன். இன்று என் பூஜாபலத்தினால் தரிசனமகப்பட்டது. நமஸ்காரம்" என்றான்.

விக்ரமசேனன்:—உன் சமாசாரம் என்ன?

சேகவன்:—"அந்த இரண்டு வியாபாரிவேஷதாரிகளும், ஒருவாரம்வரையில் தங்களிருப்பிடத்தி லிருந்துகொண்டே கிராமவாசிகளிடம் வார்த்தைகளாடி நமது இராஜாங்கத்தின் மர்மங்களையும், மந்திரிமார் முதலிய பெரியோர்களின் விடயங்களையும், அரசனரண்மனை, அரசனுடைய குமாரத்திக ளிருப்பிடம்; அவர்கள் வழக்கமாய்ச் செய்யுங் காரியங்கள் முதலான எல்லாச் செய்திகளையும் கிரகித்துக்கொண்டிருந்தார்கள். நாலு தினங்களுக்கு முன், நடுநிசியில் கிளம்பி, இராஜ அரண்மனைவரையில் மௌனமாய்ப் போய் அங்கே இருந்துமந்திரோச்சாடனம் பண்ணுபவர்போல்ஏதோ பலவாறு பிதற்றியவர்களாய் இராஜகுமாரத்திகளிருக்குமிடம்வர அங்குச் சேவகர்கள் மறுத்து, "யார் இரைச்சலிடுவது?" என்று அதட்ட, தாங்கள் கோடங்கிகளென, "கோடங்கிகள் விடியற்காலத்தில் வருவது வழக்கமாயிருக்க, நீங்கள் நடுநிசிக் கோடங்கி

கள்போ லிருக்கின்றீர்கள்" என்ன, அவர்கள் தாங்கள் அயலூரென்றும், பொழுது தெரியாமல் வந்துவிட்டதாகவும், இங்கு மணியோசை கேட்டு இனியும் பொழுதிருப்பதை யறிந்து அங்கே ஓரிடத்திற் சயனித்துக்கொள்ளலாமென்று வந்ததாகவும் கூற, சேவகர்கள், அவர்களை எங்கும் போகவொட்டாமற் சமீபத்திலோர் திண்ணையைச் சுட்டிக்காட்டிப் படுக்கை முதலியவையளித்து நித்திரை செய்யச்சொல்ல, நித்திரை செய்பவர்கள்போலிருந்து, ஜாமப்பொழுதிலெழுந்து தங்களிருப்பிடம் போயினர். மறுநாட் பகலில் எங்குஞ் சஞ்சரிக்கவில்லை. இரவிற் பிச்சைக்காரர்களைப் போல் வேஷந்தரித்து இராஜகுமாரத்திகளிருக்கும் அரண்மனை சென்று பிச்சை கேட்பவர்கள்போற் கூவ, வாயிலைக் காத்திருந்த தாதி பிச்சை எடுத்துவருமுன் அவ்வரண்மனையைச் சுற்றி உப்பரிகை மார்க்கமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நிலவு காய்ந்துகொண்டிருந்தமையால் தாதி பிச்சை கொண்டுவந்து அவர்கள் நோக்கத்தைப் பார்த்து அதட்டினாள். "கடுகடுத்திடும் பிச்சை எங்களுக்கு அவசியமில்லை" என்று அக்ஷணமே திரும்பி வந்துவிட்டார்கள். தாதி எவ்வளவு வருந்தியும் அவர்கள் திரும்பிப்பார்க்கவில்லை

"நேற்றிரவு பூவாண்டிகள் வேஷந்தரித்து அரண்மனை நந்தவனஞ்சென்று, "புஷ்ப மெடுக்க வழிவிட வேண்டும்," என்று வேண்டக் காவலர்கள் "இன்னும் ஜாமப்பொழுது சென்று வாருங்கள்" என்ன, அங்குத்தானே யிருந்துகொண்டு அக்காவலாளர்களிடம் வார்த்தையாடி நந்தவன விசேஷத்தையும் பூஞ்சோலையிருக்குமிடமும், அவ்விடத்தில் அரசனும் பத்தினிகளும் இராஜகுமாரத்திகளும் வரும் வெவ்வேறு சமயங்களையும் வெகுதந்திரமாகத் தெரிந்துகொண்டு புஷ்பங் கொஞ்சம் பறித்து வந்துவிட்டார்கள். இன்று பகற்பொழுதில் ஒன்றும் நடப்பதாயில்லை. இரவில் நடப்பதைத் தெரிந்து தெரிவிக்கின்றேன்.

மந்திரியும் களிப்புடன் யாவற்றையுங் கேட்டுச் சேவகத்தலைவனைப் பார்த்து, "அந்த இரண்டு வியாபாரிகளுக்கும் யாதொரு துன்பமும் நேராமலும் அவர்கள் செய்கைகளிலொன்றும் விடாமற்றெறிந்து கொள்ளவும் மிகவும் ஜாக்கிரதையாயிருப்பாய். அன்றன்று தெரிவிப்பதுந் தவிரக் கொஞ்சம் விசேஷமாய் யாதேனும் நேர்ந்தால், அதைப்பொழுதே தெரிவிக்கவேண்டும். நான் இரவும்பகலும் இந்த விஷயத்திற் செவிகொடுத்துங் கேட்கச் சித்தமாயிருக்கிறேன் என்பது அறியாயோ?" என்று சொல்லிச் சேவகத் தலைவனைப் போக விடைகொடுத்துத் தனியே உட்கார்ந்து, நந்தவனத்தில் இராஜகுமாரர்களைச் சந்தித்து, அவர்களுக்குப் பூஞ்சோலைவர்ணனை முதலியவற்றைச்சொன்னது நிகழ்ந்திருப்பினும் இந்த இரகசியத்தைச் சேவகர்கள் தெரிந்துகொள்ள வில்லையே; இப்படியே பராக்ரமசேகரன் ஏதாவது தீங்கு செய்யினும் தெரியாதே, என்று நினைத்துப் பரபரப்பாய்ச் சேவகத்தலைவனைப் போகுமுன் அழைத்து, "நந்தவன இரகசியங்களை அந்தப் பூவாண்டிகட்குச் சொன்னவன் யாரென்று தெரிந்து அவனைப் பிடித்துவா," என்றான்.

சேவகத் தலைவன் பயந்து, "அப்பனே! மன்னிக்க வேண்டும். நந்தவனத்திற்கு அவர்களைத் தொடர்ந்து சென்ற சேவகன் தங்களைக் குறிப்பிட்டுத் தாங்களே அவர்களுக்கு அதன் இரகசியங்களைச் சொன்னதாகச் சொல்லுகிறான். இதைத் தேவரீரெதிரில் வெளியிட வெட்கமுற்று மறைத்துச் சொன்னேன்" என்று நமஸ்க்கரிக்க, "சரி எப்படியு மிருக்கட்டும்; இனியாவது ஜாக்கிரதையாயிருங்கள்" என்று கூறி அவனை அனுப்பி விட்டுச் சுவாமி தரிசனத்திற்குச் செல்வாராயினன்.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[675-வதுபக்கத் தொடர்ச்சி]

5. மந்திரசாலைச் சருக்கம்.

347. அண்ணலங் களிகொள் யானை
யச்சுவ கண்டன் மூத்தாற்
கெண்ணலுந் தகுவ தன்றால்
இவன்பணி யகற்ற லாற்றாக்
கண்ணலங் கவரும் வேலோர்க்
கீயினுங் கரும மன்றால்
பெண்ணலங் கனிந்த பேதை
இருப்பதும் பெருமை யன்றே. 110.

அண்ணல் அம் களிகொள் யானை - சிறந்த அழகு வாய்ந்த மதமயக்குற்ற யானைப்படையை உடைய, அச்சுவகண்டன் மூத்தாற்கு - வயது சென்றவனாகிய அசுவகண்டமன்னனுக்கு, எண்ணலும் - நம்மகளை மணஞ்செய்து கொடுக்க நினைத்தலும், தகுவது அன்று - பொருத்தமுடையது அன்று, இவன்பணி அகற்றல் ஆற்றா - இவனது ஏவலை மீறி நடக்கமாட்டாத, நலம் கண் கவரும் வேலோர்க்கு - தமது அழகால் பார்ப்பவருடைய கண்ணைக் கவரத்தக்க பிற மன்னர் எவர்க்கேனும், ஈயினும் கருமம் அன்று - நம் மகளை வதுவைபுரிந்து கொடுப்பதும் தக்க காரியம் ஆகாது; பெண்நலம் கனிந்த பேதை இருப்பதும்-பெண்களுக்குரிய இலக்கணங்களெல்லாம் அமைந்து வளர்ந்து மணப்பருவத்தை அடைந்துள்ள நம்மகள் (மணமாகாத) கன்னியாக இருப்பதும், பெருமை அன்று - நமது குலப்பெருமைக்கு ஒத்தது அன்று. (ஆல், ஏ- அசைகள்.)

---

348. சூழ்கதிர்ப் புரிசை வேலிச்
சுரேந்திர காந்த மாளுந்
தாழ்கதி ராா மார்பிற்
றமனியக் குழையி னன்றன்
போழ்கதிர்க் கடவுள் போலும்
புதல்வனுக் குரிமை செய்தி
ஆழ்கதிர் விலங்க லாளு
மரசவஃ தரிது கண்டாய். 111

கதிர்சூழ் புரிசை வேலி - சூரிய சந்திரர்கள் சுற்றிச் செல்லுமாறு உயர்ந்த மதிலாகிய காவலையுடைய, சுரேந்திரகாந்தம் ஆளும் - சுரேந்திரகாந்தம் என்னும் நகரத்தை ஆளும், தாழ்கதிர் ஆரம் மார்பின் - ஒளி பொருந்திய முத்துமாலை தாழப்பெற்ற மார்பினையும், தமனிய குழையினன் தன் - தங்கக் குழைகளையும் அணிந்த மன்னனுடைய, போழ்கதிர் கடவுள் போலும் புதல்வனுக்கு - இருட்டைப் பிளக்கும் சூரியனைப் போன்ற புதல்வனுக்கு,உரிமை செய்தி - மனைவியாக்க நினைக்கின்றாய்; ஆழ்கதிர் விலங்கல் ஆளும் அரச - சூரிய சந்திரர்களும் தாழும்படி மேலோங்கிய மலைமேலுள்ள வித்தியாதர வுலகத்தை ஆளும் மன்னனே, அஃது அரிது - ஆனால் அது முடியக்கூடிய காரியம் அன்று. (கண்டாய் - அசை.)

---

349. மங்கையர் முகத்தி னீண்டு
மைகடை மதர்ப்ப மாந்தி
அங்கயல் பிறழ்வ போலும்
ஐயரி யடர்த்த வாட்கண்
பங்கயச் செங்க ணன்மேற்
படைத்தொழில் பயின்ற போழ்தும்
தங்கிய மனத்த னாகித்
தளர்விலன் தவத்தின் மிக்கான். 112

மங்கையர் முகத்தின்-பெண்களின் முகத்திலுள்ள, நீண்டு கடை மதர்ப்ப மை மாந்தி அம் கயல் பிறழ்வ போலும் - காதளவும் நீண்டு கடைப்பக்கம் மதர்க்கும்படி அஞ்சனம் தீட்டப்பெற்று அழகிய கயல்மீன்கள் திரிவன போன்றவும், ஐஅரி அடர்த்த வாள் கண் - அழகிய செவ்வரிகள் பரந்தனவுமாகிய வாளையொத்த கண்கள், பங்கயம் செம் கண்ணன் மேல் - தாமரைப் பூவைப்போன்ற செவந்த அழகிய கண்களையுடைய அந்த அருக்ககீர்த்தியின்மீது, படைத்தொழில் பயின்ற போழ்தும்-போர் செய்து வென்று தம் வசப்படுத்திக் கொள்ளப் பார்த்தாலும், தங்கிய மனத்தன் ஆகி தளர்விலன் - காமம் தங்கிய மனத்தினனாய் அவன் மனவலி அழிந்து தோற்றுக் காமத்துக்கு உள்ளாகமாட்டான்; ஏனென்றால், தவத்தின் மிக்கான் - அவன் மிக்க தவத்தைச் செய்து புலன்களை வென்றவன்.

---

350. மண்கணை முழவச் சீரும்
மடந்தையர் தூக்கும் மற்றும்
பண்கனி பாட லாடற்
பாணியும் பயின்று மேவான்
விண்கனிந் தனைய வின்ப
வெள்ளமும் வெறுத்து நின்றான்
கண்கனி யுருவக் காளை
கடவுளர் தகையன் கண்டாய். 113.

கண்கனி உருவம் காளை-கண்டார் கண்ணை மகிழ்ச்சியால் இன்புறச்செய்யும் வடிவழகு வாய்ந்த யெளவன பிராயத்தனான அவன், மண்கணை முழவம் சீரும்-மார்ச்சனைநிறைந்த முழவத்தின் தாளச்சிறப்பையும், மடந்தையர் தூக்கும்-பெண்கள் பாடும் பாட்டின் லயத்தையும், பண்கனி பாடல் ஆடல் பாணியும் - இன்னிசை நிறைந்த பாட்டோடு கூடிய நடனத்தின் அழகையும், பயின்று மேவான் - பயின்று [illegible]னாதலால் விரும்பமாட்டான். விண் கனிந்த அனைய இன்பவெள்ளமும் - தேவபோகங்கள் மிகவுங்கனிந்து சிறந்து விளங்கினாலொத்த இன்பச்சுவைப் பெருக்கையும், வெறுத்து நின்றான் - முன்னமே தெவிட்ட உண்டு இப்பொழுது வெறுத்துவிட்டான். ஆகையால், கடவுளர் தகையன் - விருப்பு வெறுப்பற்ற கடவுள் தன்மையனாக இருக்கின்றான்.

சீர், தூக்கு, பாணி - தாளத்தின் கூறுபாடுகள். இவற்றின் வேறுபாட்டைக் கலித்தொகைக் கடவுள் வாழ்த்துப்பாட்டின் உரையிற் காண்க.

---

351. செறிகழ லவற்குத் தாதை
சித்திர கூட மென்னும்
அறிவரன் கோயி லெய்தி
அணிவிழ வயர்ந்த காலை
இறுதியி லவதி ஞானி
யசோதர னென்னும் பேர
உறுவனை வணங்கிக் கேட்டான்
மகன்றிற முலங்கொ டோளான். 114

செறி கழல் அவன்கு தாதை - கட்டப்பட்ட வீரக் கழலை அணிந்த அந்த அர்க்ககீர்த்தியின் தந்தையாகிய மேகவாகன மன்னன், சித்திரகூடம் என்னும் அறிவரன் கோயில் எய்தி - மேலான அறிவினன் ஆகிய அருகதேவனுடைய சித்திரகூடம் என்னப்படும் ஸ்ரீகோயிலை உற்று, அணிவிழ அயர்ந்தகாலை - திருவிழா எடுத்துப் பூசித்தபோது, இறுதியில் - அதன் முடிவில், அவதி ஞானி - முக்கால விருத்தாந்தங்களையும் உணரவல்ல அறிஞனாகிய, யசோதரன் என்னும் பேர உறுவனை - யசோதரன் என்னும் பேரையுடைய முனிவனை, உலம் கொள் தோளான் - கல்லின் திரளையொத்த தோள்களையுடைய அரசன், வணங்கி - நமஸ்காரம் பண்ணி, மகன் திறம் கேட்டான் - தனது மகனின் (எதிர்கால) விருத்தாந்தங்களை வினாவினான்.

இறுதியில் அவதிஞானி - முடிவில்லாத, வரம்பில்லாத, ஞானத்தை உடையவன் என்றுமாம்.

---

352. பங்கயப் பழன வேலிப்
பவகிரி யரசன் பைந்தார்
தங்கிய தடங்கொள் மார்பன்
சயசேன னவற்குத் தேவி
செங்கய னெடுங்கட் செவ்வாய்ப்
பிரிதிமதி பயந்த காளை
வெங்களி யானை வல்ல
விசயபத் திரனென் பானே.

353. மந்திரத் தரசர் கோவே
மற்றவன் வையங் காக்குந்
தந்திரந் துறந்து நோற்று
மறைந்துசா சார மென்னும்
இந்திர வுலகை மெய்தி
ஏழொடீ ரைந்து முந்நீர்
அந்தர காலந் தேவர்க்
கரசனாய் ஆண்டு வந்தான்.

354. ஆ[illegible]ல் அமர போக
[illegible]தவன் அரைசர் செல்வம்

188934

போதுலா மலங்கன் மார்ப
பொருளென மருளல் செல்லான்
தீதெலா மகல நோற்றுச்
சிவகதி சேரும் என்றக்
கோதிலா முனிவன் சொன்ன
உரையிவை கூறக் கேட்டாம்.

355. அம்மையாற் றவங்க டாங்கி
யலர்ந்தநல் லறிவி னாலும்
இம்மையா னுடம்பு நீங்கி
யிகந்துபோ மியற்கை யாலும்
செம்மையாற் கடவுட் டானஞ்
சேர்வதே சிந்தை யாற்கு
மெய்ம்மையாற் கருமச் சுற்றம்
வேண்டுவ தில்லை வேந்தே.

115—118.

"பங்கயம் பழனம் வேலி பவகிரி அரசன்-தாமரைகள் (களைகளாக) முளைத்த வயல்களை எல்லையாகக் கொண்ட பவகிரி என்னும் நகரத்தை ஆளும் அரசன், பசுமை தார் தங்கிய தடங்கொள் மார்பன் -பசுமையான பூமாலை தங்கிய விசாலமான மார்பினனாகிய சயசேனன்-சயசேனன் என்பவன். அவனுக்கு தேவி செங்கயல் நெடுங்கண் செவ்வாய் பிரிதிமதி பயந்த காளை-அவனுடைய தேவியாகிய செங்கயல் போன்ற நீண்ட கண்களையும் செவந்தவாயையும் உடைய பிரிதிமதி என்பவளது வயிற்றிற் பிறந்த புதல்வனாகிய யௌவனப் பிராயத்தான், வெம்களியானை வல்ல விசயபத்திரன் என்பானே - மிக்க மதத்தைக் கொண்ட யானைகளை அடக்கியாளவல்ல விசயபத்திரன் என்பவன் ஒருவன் இருந்தான். மந்திரத்து அரசர் கோவே-வித்தியாதர வுலகத்தை ஆளும் அரசனே, அவன் வையம் காக்கும் தந்திரம் துறந்து - அவன் உலகத்தை யாளும் அரச பதவியாகிய தனது உரிமையை வேண்டாமென்று விட்டு, நோற்று-தவம்புரிந்து, மறைந்து-இவ்வுலகத்தை விட்டகன்று, சாசாரம் என்னும் இந்திர உலகம் எய்தி - சாசாரம் என்னும் இந்திர லோகத்தை அடைந்து (அங்கே), ஏழோடு ஈரைந்து முந்நீர் - பதினேழு வெள்ளம். அந்தரகாலம் - தேவவருஷங்கள், தேவர்க்கு அரசனாய் ஆண்டு வந்தான் - தேவர்களுக் கெல்லாம் அரசனாக அரசாட்சி செய்து இருந்தான்.

ஆதலால்-ஆகையால், போது உலாம் அலங்கல் மார்ப-பூக்களாற் கட்டிய மாலை அசைந்தாடும் மார்பினையுடைய மன்னனே, அமரபோகம் நுகர்ந்தவன் அரசர் செல்வம் பொருள் என மருளல் செல்லான்-தேவலோகத்து இன்பங்களை (நெடுநாள்) நுகர்ந்தவனாகிய அவன் இம்மண்ணுலகத்து மன்னருடைய செல்வ போகங்களைப் பொருளாக மதித்து மனம் மயங்கமாட்டான், தீது எல்லாம் அகல நோற்று-துயர துன்பங்கள் யாவும் அடியோடு அழியும்படி தவம் புரிந்து, சிவகதி சேரும்-அந்தமில் லின்பத்து அழிவில் வீடாகிய முத்தியைச் சார்வான்" என்று, அ கோது இலாமுனிவன் சொன்ன-என்று அப்பொழுது யசோதரன் என்னும் அந்தக் குற்றமற்ற முனிவன் அந்த மேகவாகன மன்னனுக்குச் சொன்ன, உரை இவை கூற கேட்டாம்-வார்த்தைகள் இவையென்று நாம் சொல்லக் கேட்டிருக்கின்றோம். (ஆதலால்) வேந்தே அம்மையால் தவங்கள் தாங்கி அலர்ந்த நல் அறிவினாலும் - அரசனே முற்பிறப்பில் தவத்தை மேற்கொண்டு ஒழுகியதனால் உண்டான திவ்யஞானத்தாலும், இம்மையால் உடம்பு நீங்கி இகந்துபோம் இயற்கையாலும் -இப்பிறப்பிலே உடலை நீத்தொழிந்து இவ்வுலகத்தைக் கடந்து அப்பாற் செல்லும் தன்மையாலும், செம்மை யால்-நல்ல நெறியால், கடவுள் தானம் சேர்வதே சிந்தையாற்கு-முத்தியுலகைச் சேர்வதையே எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருப்பவனாகிய அவனுக்கு, மெய்ம்மையால் - உண்மையில், கரும சுற்றம் வேண்டுவது இல்லை - தேக சம்பந்திகளான மனைவி மக்கள்முதலிய உறவினர் எவரையும் அவன் வேண்டுபவன் அல்லன்.

மந்திரம், (ஆகுபெயர்) வித்தியாதார் உலகம். தந்திரம்-(முதற்குறை)சுதந்தரம். சுதந்தரம்-உரிமை. முந்நீர் - வெள்ளம், ஒரு பேரெண். அந்தரகாலம்-அந்தரர் காலம், தேவர் வருஷம். மனிதர் வருஷம் ஒன்று ஒரு நாளாக முன்னூற்று அறுபத்தைந்து கொண்டது. கருமச் சுற்றம்-முன்னை வினையால் எடுத்த உடல் சம்பந்தமான பற்றினர்; தேக பந்துக்கள்.

மலர்வனம்.

[692-வது பக்கத் தொடர்ச்சி]

விதியில்லா மதிபாலன்.

அன்னவாறு உருத்திரசூர னுரைசெய்யுமளவில் கரைசெய்யற் கரியதோர் களிப்புக் கைமிகக் கலி கண்டன் விரைந்துசென்று, மதிமாழ்கி யயர்ந்திருந்த மகதர்படைஞருக்கு உற்றதுரைத்து ஊக்கம் ஊட்டா நிற்க, தமனியத் தகடுவேய்ந்த தலைச்சீரா முதலா யாவும் பூட்டியதோர் போர்க்கோலம் பூண்டனனாய் அப் புகழ்காழ்த்த வயவீரன் அவரிடையே வருதலானான். அங்கர்திறத்தினில் இவனை ஒருவரும் அறிந்திலர். மற்று, அவனைத் தெரிந்துகொண்ட மகதர்களோ, முத்திற்கு முந்நீர்க் கடல்குளித்த கணவனுக்காக் கரைவயின் அழுதிருந்து இரவின்கண் தாளப் பொதியொடும் அதனைத்தம் குடில்நோக்கி வரக்கண்ட மனைவியே போல் அருமையா யவ் வுருத்திரசூரனைக் கருதி நோக்கினார். நோக்குவார், உவப்பார், நிலைத்தது தம் மானமெனத் தலையினை நிமிருவா ராயவம் மகதர்தானையின் முனைப்புறம் எய்தி நின்றவன் அங்கர்தம் அணியினின்று அதன் கொழுந்துபோல் படர்தரும் மதிபாலனைக் கண்ணுற்றான்.

போராற்றல் வீரர்தம்மில் ஏனையோரை மதியாதுதனையே நெடுந்தூரம் தேடிவரும் மடமகனிவன் யாவனோவென, எதிர்வரு மேந்தலின் வீரத்தோற்றத்தை உருத்திரசூரன் நீண்டதோர் பார்வையால் வியந்து நோக்கினான். அரசமங்கையர் ஓதுங்கியுலவும் உவவன மருங்கிலோர் சலசலப் பிலிற்று மெந்திர வாவிசூழ் அரமிய தலத்தில், சசியுடைய நிசிவாய்த் தன் சிறிய கரிய நீழலை வீழ்த்துமோர் தமாலத்தருபோல், அரிதின்

வளர்ந்த அவ்விளையோன் நீண்டுயர்ந்து தோன்றலால் உருத்திரசூரன் இதயத்துள் ஆழ்ந்ததோர் இரக்கம் சுரக்க அன்னவனைத் தன்வயின் இனிதழைத்துமென்மொழி சில பேசினான் :—

"ஓ, இளையோய், இவ்வுலகம் இனியது, சுடலையோ சுடும். சுடலைத்தீயில் வேகாது வாழ்வினோடு இனிதிருத்தி. என்னைப் பார்; இரும்பினால் இயன்ற யான் பரும யாக்கையன்; இகல்பல கடந்துகடந்து தேர்ந்துளேன். குருதிக்களம் பலவற்றில் நின்றுளேன், பகைவர் பலருடன் பொருதுளேன். யான்கால்வைத்த களத்தையும் இழந்ததில்லை இதுகாறும் என் கைப்பட்ட பகைவனும் பிழைத்ததில்லை. மதிபால, எற்றுக்கோ நீயின்று மாள்வதற்கே ஆளாகி மூள்கின்றாய்? யான் சொல்வதைக் கேள் — அங்கர்படையினின் றகன்று என்னூர் வருதி. வந்தென் மகனேபோல் என்னுடனிருப்பாய். யான் சாமளவும் என் பதாகைநிழலில் உன் போர்த்தொழில் வெற்றியை இயற்றிக் காட்டுதி. நின்னனைய வீரநம்பி இம்மகதமடங்கலும் ஒருவனிலன்'.

கேட்டனன் மதிபாலன்; உருத்திரசூரன் திறல்மிகு தாலைக் கேட்டனன்; மணலில் வளர்ந்திருந்த அவன் [illegible]வரு முருவத்தைக் கண்டான். கண்டவன்முன் முழந்தாள் படியிட்டுக் கரங்களைப்பற்றி, "உன் தந்தையின் தலைமேலாணை, உன் உயிர்மேலாணை—நீ உருத்திரசூர னல்லனோ, சொல்! அவனே அல்லையோ நீ", எனக் கனவிற் பேசுவான்போல் வினவினான்.

உருத்திரசூரனோ, இன்னவாறு தன்முன் இறைஞ்சிய இளவலை எதிர்நோக்காமற் புறக்கணித்து மறுபுறந் திரும்பித் தன்னுளே சில சிந்திக்கலாயினான்.

"ஓகோ, இச்சிறு நரியின் கருத்து யாதெனத் தெரிகின்றது. பொய்யும் சூதும் பெருமிதச் செருக்கும் மிகவுடையர் இவ்வங்கச் சிறுவர். ஆதலின், ஒளியாமலிவனுக்கு உருத்திரசூரனிங்கிருக்கின்றானென் றுண்மையை உரைப்பேனாயின், இவனோ பணியவும் மாட்டான், எம் பகைவரைவிட் டகலவும் மாட்டான். இத்தனிப்போரிடாததற் கேதேனும் சூழ்ச்சிசெய்து, என் புகழினைப் புகழ்ந்து பரிசில்பெற்று வந்தவழியே மீள்வான். மீண்டு, தன்னரசன் மாளிகையில் விருந்தினரிடையே எழுந்து, "ஒரு நாள், மகதவீரனைவரையும் என்னுடன் தனித்தனி போர்செய அறை கூவினேன்: அவர்களோ நடுங்கியொடுங்கினர்; உருத்திரசூரனொருவனே துணிந்தனன் : பிறகு நானு மவனும் ஒத்த வீராதலின் இகலின்றி யளவளாவி நேயமுடன் பிரிந்தோம்" என்ன, அங்குளோர் வியந்துதம் ஓகைவிளம்புவார். இப்படி இம்மகதவீர ரெல்லாம் என்னால் இழுக்குற்றவராவார்"...

இவ்வண்ணந் தன்னுள்ளே சிந்தித்த உருத்திரசூரன் மதிபாலன் முகந்திரும்பி இவை பேசினான் :—

"எழுந்திரு. எற்றுக்கு நீ உருத்திரசூரனைப்பற்றி வினவுகின்றாய்? அறைகூவிப் போர்க்கழைத்த நின்முன் நானேநிற்கின்றேனிங்கு: இனிஉன்சேவகத்தைச் செலுத்திக்காட்டு, அல்லது என்னைப் பணிந்திடு. உருத்திரசூர னொருவனைத்தானோ பொருவாய் நீ. மதியிலாச் சிறுவ, மனிதரென் றிருப்போரெல்லாம் உருத்திரசூரன் முகத்தைப் பார்த்தவளவில் பறந்தோடுவார்! உருத்திரசூரப் பெரியோன் இன்று நின்முன் நின்று தன்னைத்தெரிவித்துக்கொள்வானேல் பின் போரென்ற பேச்செதுவும் நிகழாதென்பதை யான் நன்கறிவேன். யான் எவனோ அவனே ஆகுக; உனக்கொன் றுரைக்கின்றேன் கேள். கேட்டு, உன் இதயத்தின் உட்புறத்திலே ஆழப் பொறித்தெழுதி வைத்துக்கொள். ஒன்று உன் வீணிடம்ப விளம்பரச் செருக் கொழிந்து என்னைப் பணிந்து பிழைத்துப்போ; அல்லது; உன் எலும்பெல்லாம் இம்மணலிற்சிதற வெய்யிலிலுலர்ந்து இவ்வாற்றின் மாரிப்பெருக்கில் அடித்துப்போவதாய் முடியும்."

இதுகேட்ட மதிபாலன் எழுந்துநின்று, "அத்துணை வன்கணோ வுனக்கு? இப்படியே என்னை நீ அச்சுறுத்தலாகாது. சொற்களால் விளர்த்தழியுமோர் சிறுமியோ யா னல்லன். எனினும், 'உருத்திரசூரன் இங்கிக் களத்தில் நிற்பானேல் பின் போரென்பதில்லை' என்றொரு சொல் நீ நனிகூறினாய். ஆதலின் உருத்திரசூரன் இப்பொழுது சேய்மை யாயினான்; நாமிருவருமிங்கு நிற்கின்றோம். தொடங்கு...என்னினும் நீ பருத்தவன், நேரார்காண நடுக்குறுந் தோற்றத்தன்; போர்ப்பயிற்சி பெரிதுடையோன்—யானோ இளையனவதும் அறிவேன். எனினும் வெற்றியோ விதியின் உயிர்ப்பினால் இயங்குவதொன்று. வெற்றி யுனதே என்பதை நிச்சயமா யறிந்ததாய் நினைக்கின்றாய். எனினும் நிச்சயமாயதனை நீ யறிவதியலாது. விதியெனும் அலைமேல் கிடப்பவர் நாம். அது கரையிற்றான் சேர்க்குமோ அல்லது ஆழ்கடலுள் புரட்டிவீழ்த்தி மாணத்தில் முழுக்குமோ யாரே அறியவல்லார்! எத்துணை தேடியும் அந்தத்தில் முடியும் வகைதெரியாது காண். வேளைவருங்கால்,விதியின்நினைவீதெனவினைவு தான் கற்பிப்பதாமே," எனச் சாற்றினான்.

உருத்திரசூரன் இதற்கெதிர் யாதும் இயம்பலின்றித் தன் வேலினை எய்தனன். கடியவேக இப்படையின் வரவினைக் காணுமுன்னம் மதிபாலன் மின்னினும்விரைந் தொருசிறை யொதுங்க அவ்வயில் சீறிச் சென்று பொங்கி யெழும் மணலுள் மூழ்கியது. பின் மதிபாலனும் எறிந்தான். எறிந்த அச்சவளம் உருத்திரசூரனது இருப்புப் பரிசையை நேருறத்தாக்கியது. கல்லெனவக் கருவி ஒலித்ததேனும் எறிவேல் அங்கு இற்று வீழ்தலும், உருத்திரசூரன் மரத்தண்டைக் கைக்கொண்டான். கான்வளர் பெருந்தருவின் திருத்தாத அடிப்பாகம் அது. இவனன்றி யொருவராலும் அசைக்க வொண்ணாக் கனத்தது. அன்னதோர் கதையினை உயர்த்தி மோதினான். ஆயினும், மீண்டுமம் மதிபாலன் ஊர்தரு மரவுபோல் விரைவுடன் இலக்கிகந்து விலகலும் அக்கடிய வேக நெடிய தண்டு இடியேறெனப் படியினில் வீழ்ந்து அக் கதங்கொண்ட வெந்திறலோன் கைகழன் றகன்றது. அவ்வேகத்தைத் தொடர்ந்த உருத்திரசூரனும் முழங்கால் மடிந்து சாய்ந்து மண்ணினைத் தன்கைகளால் கதுவலாயினான், வேண்டுமெனின் மதிபாலன் வெல்வதற் கேற்றவோர் அமையம் ஈது. உறையினின்று தன் வாளினையுருவி, மதிமயங்கி மணல் தூர்ந்து முழந்தாளில் கிடக்குமந்த அரும்பெருந்திறல் உருத்திரசூரனைப் பிளந்துழுது தீர்த்திருக்கலாம். மற்று மதிபாலனோ, வள்ளுறை நீங்கா வாளினனாய், மூரலூர்ந்த முகம்விளங்க வினயமுடன் பின்னிடைந்து இளகுமென் கிளவிகள் சில விளம்பலுற்றான் :—

"வேண்டா வேகமுடன் மோதுகின்றாய் நீ. நின்னுடைய தண்டுஇது அவ்வெள்ளத்தில் மிதக்கலா மல்

லது எனதென்பினைச் சிதைப்ப தெங்ஙனம். இனி கோபியா தெழுந்திரு. நானுங் கோபங்கொண்டிலேன். இல்லை, உன்னைக் காணுமளவில் கோபம் என்னைக் கை விட்டுப் போகின்றது. உருத்திரசூர னல்லையென்று நீயோ இயம்புகின்றாய். அப்படியே இருக்கட்டும். மற் றென் இதயத்தை இவ்வண்ணம் நீண்டவல்ல நீயாவன்? இளைஞனேயாயினும் போர்பல யான் பார்த்துளேன். உதிரத் தலைகளைத் துழாவி யான் முன்சென்றுளேன். மறுகிச் சாவோர் கூக்குரலைக் கேட்டுளேன். எனினும் என்னிதயம் இதன்முன் இன்றுபோல் என்றுந் தீண் டப்பெற்றதில்லை. விண்ணின்று வந்ததோ இன்றிவ் விதயத்தின்மென்மை! ஓ, செருவின்முதிர்ந்தபொருந, நாமிருவேமும் விண்ணவர்க்கே பணிந்திடுவோம். வா, சினங்கொண்ட நம் வேற்படைகளை இம்மணலிலே நட்டு, இகல்தீர்ந்து நாமிருவரும் உறவாடி நட்பின ராகலாம். உருத்திரசூரனது செயல்களை எனக்குச் சொல்லுவாய். இம்மகதர் படையினுள் யான் இரக்க மின்றி மலைந்தழிக்க வேண்டுமளவு மறவருளர். நீயும் பொருதிட எம்மிறைவன்பால் வீரர்பலர் வேறுளர். நின்வேலினோடு இகல வருவாரைப் பொருதிடுக, மற்று, ஐயகோ, நினக்குமெனக்கு மிடையே நேயமே நிகழ்வதாக—''

இன்னவாறு இகலொழிய நேயமே நிலைத்திருக்கும் வகைநாடி இரந்து வேண்டினனச் சிறுவிதிப் பெரு விறல் மழவிடை யனைய மதிபாலனே.

இன்னவா றிவனுரைத்தபோ தவ னெழுந்திருந்து, பரிபவந் தன்னையின்றி தின்னவே வந்தவந்தச் சீற்றத் தால் பதறுமுடல் துடிதுடிக்க நிற்கலுற்றான். கை கழூன்ற கதையினைத்தன் வன்காலா லுதைத்துருட்டிப் பறித்தெடுத்த வேற்படையின் கூரலகு சினமுடைய சுடர்விரித்து, கேடுகுறித்தெழும் விண்கொள்ளி உற் கைபோல் ஒளிர்ந்தது. மார்பினின்று ஊதைபொங்க வாய்வழியே வெஞ்சினத்து நுரைபொங்க, விழிபொ ழிந்த குருதியிடைச் செந்தீயின் பொறிகள் பொங்க எயிறுதின்று கடுஞ்சொற்கள் இவை சில வெடித்து வரலாயின:—

“ஏ, பெண்ணே, உன் கைவன்மை காட்டினையலை; மெல்லிய கால்கொடு ஒல்கியொல்கி உயிர்பிழைத்தாய்; ஏ, இச்சகம் பேசிவாழும் சுரிகுழற் சிறுமி, ஏ கூத்தி, மதுரமொழி பயின்ற மங்காய், சீசீ! போர்செய்ய வா. உன் பாழுங்குரலை இனி நான் கேட்கவேண்டா. நட மாடும் மடவார்க்கு எதிர்நடனம் செய்துகொண்டு உன்புரவலன் பொழிலகத்தே இப்பொழுது நீ இருக்க வில்லை. போர்நடம் புரிய இங்கு என்முன்னே நிற் கின்றாய் என்பதை மறத்தியோ நீ மடமகனே. மலைய வே வந்த யான் விளையாடி மீளமாட்டேன். முடியும் வரை அடர்ந்து தீர்வேன். உறவென்றும் நட் பென்றும் உடனிருந்து உண்ணும் விருந்தென்றும் பயனிலாநின் புன்மொழிகளை இனி நீ பேசுவ தொ ழிந்துவிடு. உன்னுடைய திறலெல்லாம் ஒருங்கு திரட்டிக்கொள்; உன் கள்ளத் துள்ளலும் கைதவச் சூழ்ச்சியும் இனி என்னிடத்துச் செல்லாது: இருந்த இரக்கமெல்லாம் இறந்தொழிந்தது. ஏனெனில், இன்று உன்மெல்லிய துள்ளலாலும் மாதாரனைய சூதி னாலும் இவ் விருபெரும் சேனையின்முன் என்னை நீ பரிபவப் படுத்திவிட்டாய்.''

தாறனைய இந்நிந்தனை தூண்ட மதிபாலனும் தன் வாளினை உறையினின் றுருவினன். இருவேறு திசை களினின்று ஓரிரைமேல் பாய்ந்து வீழும் எருவைகள் இரண்டென்ன மோதினர். பரிசையோடு பரிசை முட் டிக் கிண்ணென்ற வொலி எழுந்தது. காழ்முது மரங் குறைக்குங் கானவர்களென்ன ஒருவர்மேல் ஒருவர் அடிகள் ஏவினர். தந்தையொடு மைந்தன் செய்தவத் தகவிலாச்சமரில் இயற்கைப் பொருள்களும் கலந்து கொண்டன வென்னலாம். கதுமென ஓர்முகில் தோன் றி இப்பொருநர் சிரமீது பரிதியை இருட்டியது. அவர் அடிநின்று வன்காற்றெழுந்து அப்பரப்பினை மறுகிப் பெருக்கி மணற் றிரையால் அவ்விருவரை யும் சூழ்ந்து மறைத்தது. மருள்தருமவ் விருளில் புதைந்திருந்தவர் பொருதிடுமவ் விருவர் மட்டுமே. நோக்கி நின்ற தானையுள்ளோர்க்குப் பகலொளி குறைந்ததில்லை. விண்ணகம் யாதுங் களங்கமின்றி விளங்கியது. கதிரவன் கிரணங்கள் நதிப்புனலில் வில் லிட்டொளிர்ந்தன. அவர்களோ மங்குலூ டாழ்ந்தன ராய்க் கண்கள் சிவக்க வருந்தியுயிர்த்து அருஞ்சமர் புரிந்தனர்.

முதலில் உருத்திரசூரன் உந்திய வேலினை மதி பாலன் நீட்டிய கேடகம் ஏந்திக்கொண்டது. இதனால் இருப்புத்தகடுகள் தகர்ந்ததன்றித் தோல்வரை எட்ட வில்லை. கனன்றுருமி உருத்திரசூரன் அவ்வேலினைப் பறித்து வாங்கினன். பிறகு மதிபாலன், உருத்திரசூர னது தலையின்மேல் தன் வாளினால் எற்றினன். அவ னணிந்திருந்த தலைக்கவசத்தின் இரும்பு முழுவதும் பிளந்ததில்லை. எனினும், பழுதுறு திதுகாறுந் தன் மாறுத வெற்றிக்கோர் அறிகுறியாய் அவன் தன் சிரா வில் செருகியிருந்த சிறகுகள் புழுதியில் புதையவிழுந் தன. அப்பொழுது, அவர்தமைக் கதுவிய இருள்பின் னுங் கருத்தது; விசும்பினூடு பேரிடி உருண்டது; மின்தோன்றி மேகத்தைக் கிழித்தது; அவ்விடியினால் இருதிறப்படைகளும் அலமந்து நின்றவேனும் மதி பாலன் மருண்டிலன், சலித்திலன். மீண்டும் முடுகி உருத்திரசூரன் சிரத்தினில் மோதினன். இச்சமயம் அவ்வீரன் தன்தலையை நெளித்துச் சாய்த்தனன். மதி பாலன்கை வாளோ, பூண்மட்டும் எஞ்சிநிற்கக் கண் ணாடிபோல் ஆயிரந்துண்டங்களாய் உடைந்துஉதிர்ந் தது. உருத்திரசூரன் தன் சிரத்தினை உயர்த்தினன். உரகமென்ன அவன் கண்கள் உக்கிரம் கக்கின. கொலைநவிலும் தன் கையயிலை உயரக் குலிக்கி, “உருத் திரசூர'' என்று உரக்கக் கூவினன். அதனைக்கேட்ட னன் மதிபாலன்; உற்றதோர் வியப்பினால் ஒடுங்கிவிட் டனன்; ஓரடி பின்னிடைந்து எதிர்வரு முருவினை கூசிய கண்களால் குறித்து நோக்கலும், மனமலைவுற் று மருள்பாய, காவல்கேடகத்தைக் கைநழுவ விட்டு விட்டான். பாழுமவ்வேலும் அவன் விலாவினுள் உரு விச்சென்றது. சுழன்று பின்னுறத் தடுமாறிப் படிமீது சாய்ந்து வீழ்ந்தான். இதன்பின் இருளுங்கலைந்து காற்றுந்தணிந்து, வெயிலும் புறப்பட்டுக் காரெலாம் கரைந்துதீர, இருபுறத்திருந்த படைஞர்களும், யாதுந் தீதின்றி நின்றிருந்த உருத்திர சூரனையும், புண்ணு ற்ற மதிபாலன் குருதிபாய மண்ணுற்றுத் தரையில் கிடப்பதையுந் தெரியக்கண்டார். இதன்மேல் உருத்திர சூரன் தன்வாய் கைக்க நகைசெய்துஉரைக்கலானன்:-

“ஏ ஏ, மதிபால, மகதப்பெருமகன் ஒருவனைக்

கொன்றுநீ இன்றுன் கொற்றத்தினைக் கொண்டு மீள லாமென மனத்தில் எண்ணினாய். மற்று, அவ்வொரு உருத்திரசூரனே நின்னுடன் பொரவரலாமென்றும், வந்தபின் உன் வஞ்சனைமொழிகளால் அவன் இத யத்தை இளகச்செய்து, நட்பும் பரிசிலும்பெற்று மீள லாம்என்றும்மதித்தனைபோலும். பிறகு, அங்கவீரரெல் லாம் உன் ஆண்மையைக் கொண்டாடிப் பரந்த புகழி னால் உனது முதிய தந்தையை உவக்கச் செய்யலாம் என நினைத்தனை. படுமடயா, யாரென்று தெரியாத வொருவனால் நீயே கொல்லப்பட்டாய்! உன் நண்பர்க் கும் முதியோன் உன் தந்தைக்குமின்றி இனி நீ வெவ்வாய் நரிகளுக்கே அருமையாகின்றாய்.''

இன்னதற்கு மதிபாலன் எஞ்சாது எதிர்விளம்பு வான்:—

“உன்னையா னறியேனேனும், இவ்வெங்கண் வீர மொழிகளெல்லாம் வீண். என்னைக் கொல்வது நீ யல்லை; ஏ அகந்தை மிகுந்து தற்புகழ் நெடிதுரைப் பாய், நீயல்லை—உருத்திரசூரனே என்னைக் கொல் கின்றான்; தந்தையின்பால்பரிவுடைய இந்த என் இத யம் கொல்கின்றது. அல்லாக்கால், நீயன்றி உன் போன்ற பன்னிருவர் ஒன்றுபட வந்தெனை எதிர்ப்பி னும், இற்றைக்கு முன்னாள் வரையில் யான் யாவனோ அவனேயா யிருந்தேனாயின், நானங்குநிற்க அவரிங் குக் கிடக்கவேண்டும். மற்று, அவ்வருமையுடைய ஒரு பெயரோ திண்ணிய என் கரங்களைத் தளர்த்தி விட்டது—அப்பெயரும், என் இதயத்தை எல்லாம் உழக்குதற்குயாதோ நின்பாலொன்றுளது, அதுவும்- என்கைக் கேடயத்தை நழுவி வீழ்த்தின; உன் ஈட்டி நிராயுதயனா யிருந்தவொரு பகைவனை உருவித்தைத் தது. இப்பொழுதோ நீ பெருமித மிகக்கூறி என் விதியினை நிந்தித்து நகுகின்றாய். இனி, இது கேள், வன்கணாள, இதுகேட்டு உன் குலைநடுங்குவாய். மா பெருந்திறல் உருத்திரசூரன், என்னைக் கொன்ற இப் பழியினை வாங்காது விடமாட்டான். உலகடங்கலுட யான் தேடிவந்த என் தந்தை இப்பழிதீர உனக்குரிய தண்டனையை செலுத்தியே வைப்பான் கண்டாய்!''

இம்மொழிகளைக் கேட்டபின்னும் இளகாத முகத் தனாகி, “ஏஏ, தந்தையென்றும் பழியென்றும் என் னிது பிதற்றுகின்றாய்; பெருந்திறல் உருத்திரசூர னுக்கு மகனெவனும் இருந்திலன்'' என உருத்திர சூர னியம்புதலும், மதிபாலன் ஒடுங்குகின்ற குரலோ டும் இவை நவிலலானான்:—

“இருந்தனன் இருந்தனன், இருந்திழந்த அம்மக னே நான். இச்செய்தி ஒருநாள் அவன் செவி சேர் வது நிச்சயம். இப்பொழு தவன் இருக்குமிட மறிகி லேன். நெடுந்தூரத்திற்கப்பால் எவ்விடத்தோ இருக் கின்றான். எங்கிருப்பினும் இச்செய்தி முள்ளென அவனுள்ளத்துளாழ்ந்து தைக்கத் துண்ணென்று தன் படைக்கலங்களைத் தாவிப்பற்றிப் பழிதீர்க்க அறை கூவுவான். கொடியோய், இருந்தமகன் ஒன்றே, அவனை இழந்த சீற்றமும் வன்துயரமும் எவ்வளவாகுமென்று நினைக்கவும் வல்லையோநீ. ஐயகோ, அத்துயரை யான் காணும்வரை என்உயிர் காத்திருந்தா லாகாதோ! ஐய! அவனினும் எனதன்னையை நினைத்துயான் பெரிதிரங் குகின்றேன். பொருளோடும் புகழோடும் மதிபாலன் போர்முடிந்து மீண்டுவர ஒருநாளும் இனி அவள் காணமாட்டாள். இருண்ட இச்செய்தி வாய்நின்று வாய்மாறி அவள் காதினை எட்டுதலும் கதியற்ற அவ் வேழை, தன் கண்களிக்க எதிரினி வருதலன்றி மதி பாலன் நெடுந்தூர மகதத்தில் பேர்தெரியாப் பகைவ னுடன் பொருதபோரின் மடிந்துதீர்ந்தானென ஓர்ந்து கொள்வாள்.''

பேசினனிவை, பேசிப்பின் தான் பிரிந்துவந்த அன் னையையும் மரணமெய்தும் தன்னையுங் குறித்து அழு வதானன்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறுதீர்

குழந்தைகளுக்கு:

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

“பால சுதா” (Reg.)

அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவலூதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

யுனைடெட் ஸோல் ஏஜண்டு: கன்வஸர்ன், மதுரை.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.

I.D.L. சயாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை

"நஞ்சன்கூடு பல்பொடி"

சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. ஸ்பெ. மெடிகேடட்-டப்பி

பிரான்சு: மதுரை. காஞ்சீபுரம்

யாப்பிலக்கணம்

செய்யுள்—ஆசிரியப்பா

[694-வது பக்கத் தொடர்ச்சி]

ஆசிரியப்பாவில் தொடையமைப்பு

அடித்தொடை அமைப்பிற் கேற்றவாறு வெண்பாக்கள் ஒருவிகற்பமும் இருவிகற்பமும் பலவிகற்பமும் ஆவதைக்கண்டோம். அகவற்பாவில் இவ்விகற்பங்களை வகுத்துக் கூறுவதில்லை. எனினும் பிற்றைக் காலக் கவிகள் பெரும்பாலும், ஒவ்வோரடியிலும், இணை பொழிப்பு ஒரூஉ மோனைமுதலிய தொடைகளிலொன்றும் பலவும் இரண்டிரண்டடிகளுக்குள் அடியெதுகையும் பெரும்பாலும் அமைத்தேபாடுவர். இவைகளோடு ஒவ்வோரடியிலும் பொழிப்பெதுகையும் அமையுமாயின் பின்னுஞ் சிறப்புடைத்தென்று சிலர் கருதுவார். உதாரணமாக, ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் இவ்விதழ்களில் முன், (வால்யூம் 2, பக்கம் 8) வரைந்துள சந்திரையை, (அவர் சீரும் அடியும் பிரித்துக் காட்டியிலரேனும்) அகவற்பாவில் பின்வருமாறு துவக்குகின்றார்:—

வான்கடன் மேய்ந்த சூன்முதிர் மங்குல்
மீன்முடை யுணவை வெறுத்திட் டினையா
கடிகமழ் காவின் காய்கனி மேவிப்
படியிடை யிறங்கப் பார்ப்பன போன்று
முலைமுடி யெட்டிக் கைந்நிரை வாங்கிச்
சினை நுனி நின்றுஞ் சினை நுனி பற்றி
இருபுற மோங்கிய பெருவரைச் சாரல்
தருக்களி லூர்ந்து தவழா விழியக்
கைவினைப் பாயின் மலரொடு கனுன்று
பைந்நிறப் புல்லுங் தரையகம் படரச்
செடிபல பூத்த பூவின் செல்வம்
கடிதேன் நாறிக் கமழ்தல் செய்ய
உவதைச் சிறுமி யோடையு மோடி
நவமணி நான்ற அருவியும் பாய்ந்து
புதுமலர் சூடிப் பொற்பொடி யாடி
மதுமடுத் துண்ணுத் தான்புணர் மகிழ்நன்
அலைகடல் நாடி யதடக் கல்லின்
நிலையிலள் குதித்து விரையா நிற்கப்
பனிபொழி காலை பகலோன் வரவே
இனிதின் னேற்பா ளொருதனி நின்ற
பொன்முடிக் குன்றம் புவியினில் நிமிரத்
தன்னேர் கடந்த தனிப்பெருஞ் சிறப்பின்
விழியிமை கொள்ளாங் வெழிலமை சூழல்
கழைவளர் காட்டுக் குடகின் மலைவாய்.......

இதனில் எல்லா அடிகளும் இரண்டிரண்டாய் அடியெதுகை பெற்றன. அதனோடு பெரும்பாலும் மோனையும் இருக்கின்றது. அப்படி மோனையில்லாது "இருபுற மோங்கிய பெருவரைச் சாரல்," என்றும், விழியிமை கொள்ளா எழிலமை சூழல்" என்றும் வருகின்ற அடிகளில் பொழிப்பெதுகை உளது." வான்கடன் மேய்ந்தசூன்முதிர் மங்குல்," என்னும் முதலடியில் பொழிப்பெதுகையோடு மோனையும் இருக்கின்றது. இப்பாட்டுப் பொருள் நயமும் ஓசையின்பமும் உடையதேனும், இப்படித் தொடைகள் பல வரவேண்டுமென்ற முயற்சியால் ஒவ்வோரிடத்தில் வலிந்து கொணர்ந்த சொற்கள் இப்பாட்டின் சிறப்பிற்குச் சிறிது இடையூறு செய்கின்றன என்று எண்ணும்படி நிற்கின்றன. இப்படித் தொடைகள் பல வருதல்வேண்டும் எனும்நியதியேனும் அவசியமேனும் ஆசிரியப்பாவிற் கில்லை.

இது ஒருவகை மற்று, இலக்கணத்திற் சொல்லப்பட்ட தொடையும் தொடைவிகற்பமும் போலாது வெறுபடத் தொடுக்கும் செந்தொடைவாய்ந்த ஆசிரியப்பாக்கள் பல பண்டை நூல்களிற் காணலாம். உதாரணமாக,

செயிருமுகந்த நுரைபிதிர்ப் படுதிரைப்
பராரைப் புன்னை வாங்குசினைத் தொடுத்த
கானலம் பெருந்துறை நோக்கி யிவளே
கற்றோர்க் குட்டுவன் கழுமலத் தன்ன
வம்மா மேனித் தொன்னலஞ் சிதையத்
துஞ்சாக் கண்ண ளலமரு நீயே
கடவுண் மராத்த முண்மிடை குடம்பைச்
சேவலொடு வதியுஞ் சிறுகரும் பேடை
யின்னு துயவுங் கங்குலு
நம்மூ ருள்ளுவை நோகோ யானே,

என்னுமிச் செய்யுளில் ஈற்றடியில் பொழிப்புமோனை ஒன்றிருப்பது தவிர வேறெத் தொடையும் இல்லாமை காண்க. இப்படியே,

பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாட
னன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே

என்னும் அகவலும்,

இருங்கழி மலர்ந்த வள்ளிதழ் நீல
மூன்புலான் மறுகிற் சிறுகுடிப் பாக்கத்
தினமீன் வேட்டுவர் ஞாழலொடு மலையு
மெல்லம் புலம்ப னெகிழ்ந்தன தோளே

என்னும் அகவலும், எவ்வகைத் தொடையும் அமையப் பெறாது வந்திருக்கின்றன. ஆயினும் இவைகளின் சிறப்பிற்குக் குறையில்லை. எனினும் பண்டை நூல்களுள் மணிமேகலையில் பெரும்பாலும் அடியெதுகையோடு வேறோர் தொடையுங் கூடியே,

ஓங்கிய பௌவத் துடைகலப் பட்டோன்
வான்புணை பெற்றென மற்றவட் குரைப்போன்
மேவிய பளிங்கின் விரிந்திற் பாவையிஃ
தோவியச்செய்தியென் றொழிவேன் முன்னர்க்
காந்தளஞ் செங்கை தளைபிணி விடா
வேந்திள வனமுலை யிறைநெறித் ததூஉ
மொத்தொளிர் பவளத் துள்ளொளி சிறந்த
முத்துக்கூர்த் தன்ன முள்ளெயிற் றமுத
மருந்தே மாந்த வாருயிர் தளிர்ப்ப
விருந்தின் மூர லரும்பிய தூஉ
மாயிதழ்க் குவளை மலர்புறத் தோட்டிக்
காய்வேல் வென்ற கருங்கய னெடுங்க
ணறிவுபிறி தாகிய தாயிழை தனக்கெனச்
செவியகம் புகூஉச் சென்ற செவ்வியும்

என்று அகவற்பாக்கள் அமைந்திருக்கக் காண்கின்றோம்.

ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்றாகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவது போலவே பொங்கி வரும்.

விலை ரூ. [illegible]—8—0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி லிமிடெட்,

சென்னை.

:: உத்தம தோழன் ::

அறியாமையினுல் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழி யென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனுமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

— திருக்குறள் —

மூலமும் சொற்றுறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது. மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

ஏற்படுத்தியது] நாஷனல் [1906.

இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷுரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலையாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ்	ரூ. 1,13,55,069.
1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு	11,51,813.
பிரீமியம் வரும்படி	30,83,936.
1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி	7,47,608.

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்
1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலிஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமனவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.

R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

நாஷனல் பையர் அண்டு ஜனரல் இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷுரன்ஸ் பில்டிங்., 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

தீ, மோட்டார்கார் மோட்டார் ஸைகில் இன்ஷுரன்ஸ். கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றாவது ஆண்டு நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா	ரூ. 2 0 0
வெளி நாடு ,,	ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணு 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசீய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய

திரு அருட்பா

வசனப்பகுதி

ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பி. ஏ. எம். எல் அவர்களது அடக்க விலைப்பதிப்பு.

புஸ்தகவிலை, 4, அணுவும், புஸ்தக போஸ்ட் செலவிற்காக, 1 அணுவும், ஆக, 5 அணு தபால் ஸ்டாம்புகள் அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.

கலாநிலயம்—புரசைபாக்கம் சென்னை.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :— கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
5. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
6. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
7. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மலர்வனம் பழமுதிர்சோலை, மேனாட்டுத் தத்தவ அறிஞர்களாய பிரடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்தவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கம்பராமாயணம் : மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
2. அப்பர்:—கட்டுரைகள் 50
3. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
4. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
5. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
6. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
7. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
8. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
9. நம்மாழ்வார் வைபவம்:— கட்டுரைகள் 12.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

3-வது வால்யூம் 1930-ஆம் ஆண்டுப் பிரதிகள்.

1. கம்பராமாயணம்:— மந்திரப்படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம் சட்டுரை 48.
2. குறுந்தொகை:— 400 பாட்டுகளும் உரையுடன் 34.
3. தமிழ்ப்பாடம்:—கிருஷ்ணன் தூது, நைடதம், நளன் தூதுப் படலம். இலக்கணம் புணரியல் முற்றுப்பெற்றது.
4. அப்பரும் 64 கலைகளும்:—36.
5. நம்மாழ்வார் வைபவம்:—34.
6. இலஞ்சிப்பாவை:—இதழ்கள் 24.
7. ஆச்சரிய சூடாமணி:—(ஒரு மொழிபெயர்ப்பு நாடகம்) 15.
8. மானதசாத்திரம்:—(நடத்தை) 32. மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், சிறுகதைகள், மலர்வனம், பழமுதிர்சோலை, மாதவிமாதவம் ஆகிய பல கட்டுரைகள்.

மேற்கூறிய மூன்று வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	8	0	பையிண்டு செய்யாதது	10	0	0
காலிகோ கில்ட்	10	0	0	காலிகோ கில்ட்	11	8	0
ஆப்லெதர் கில்ட்	10	8	0	ஆப்லெதர் கில்ட்	12	0	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

சுயராஜ்யத்திட்டம்:-கப்பலில் காந்திபடிகளைக்கண்டு ராய்ட்டர் பிரதிநிதி பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது அவர் இந்திய சுயராஜ்யத் திட்டத்தைப் பற்றியும் இங்கிலாந்தில் தாம் மேற்கொண்டுள வேலையைப் பற்றியும் கூறியவற்றின் சுருக்கம் வருமாறு:—

"இந்தியாவைத் தற்காலம் பாதித்துவரும் இன்னல்கள் எல்லாவற்றினின்றும் அதை மீட்க நான் இயன்றபடியெல்லாம் முயல்வேன். அவசியமாயின், இந்தியா தவறுகள் புரியவும் புதிய திருத்தமுறையில் உரிமையிருக்கவேண்டும். எனது முறையில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேற்றுமைக்கு இடமில்லை. எல்லோரும் உரிமையுடன் இந்தியாவில் வாழவேண்டுமென்பதே எனது விருப்பம். திருத்தப்பெற்ற இந்தியாவில் குடிப்பழக்கம் இராது. தீண்டாமை அகன்றுவிடும், பெண்களுக்குச் சம உரிமை யுண்டு. பிறநாடுகளுடன் இந்தியா தோழமையே பூண்டிருக்கும். எனவே இந்தியாவிற்கு அதிகமான சேனை வேண்டுவதில்லை. இந்தியருக்கும் அயல்நாட்டாருக்கும் வேற்றுமையின்றி எல்லோருக்கும் நியாயமான காப்பு இருக்கும். இத்தகைய நிலையே வேண்டப்படுவது. அதைப்பெற என்னால் ஆனவரையில் வட்டமேஜை மஹாநாட்டில் நான் முயல்வேன். நான் வெற்றிபெறலாம், பெறாதும் போகலாம். அது என் சிந்தனையன்று. என்கடமையைச் செய்து முடிப்பேன்.

***

ருஷியர் முயற்சி :—சோவியத் ருஷ்யாவின் பொதுவுடைமைக்கொள்கை எங்கும் பரவும்பொருட்டும், அதனால் மனிதருக்குள், பொருளால் ஏற்படும் ஏற்றம் தாழ்வு அகலும்பொருட்டும் பிரசாரம்செய்ய முயற்சிகள் பல நடக்கின்றன. இவ்வேலைக்காக ஏற்பட்டிருக்கும் மத்ய பிரசாரக் கமிட்டியார், நாஸ்திகம் உலகத்தில் பரவாதவரையில் பொதுவுடைமைக் கொள்கை வளர்ச்சியுறாது என்று தீர்மானித்து நாஸ்திகத்தை உலகமெங்கும் பரப்ப ஒரு திட்டம் போட்டிருக்கின்றனர். அது வருமாறு :—

சகல மதங்களுக்கும் விரோதமாகப் பிரசாரம் செய்து, எம்மதமும் மாந்தரால் விரும்பப் படுவதற்குரியதன்றெனா நிரூபிக்கவேண்டும்.

ஒவ்வொரு தேயத்திலும் இருக்கும் வேலையில்லாதார்களைச் சேர்த்து, மதப்பற்றை ஒழித்துவிடும்படி தூண்டவேண்டும். வேலையில்லாது திண்டாடுபவர்களுக்குச் சாப்பாட்டிற்குப் பணம் கிடைக்குமாயின் அவர்கள் மதத்திலிருந்து சுலபமாய் விலகிக்கொள்வார்கள்.

சிறுவர்கள் பள்ளிப்பிள்ளைகள் முதலியவர்களின் மனத்திலிருந்து மதஉணர்ச்சி விலகுமாறு செய்யவேண்டும். இதற்கு எவ்வழிபற்றலாம் என்பது ஆலோசிக்கப்படவேண்டும். சர்வமதங்களுக்கும் விரோதமான சினிமாக்களும் நாடகங்களும் எங்கும் காட்டப்படவேண்டும். மதவிரோதமான கதைகள் எழுதப்படவேண்டும். மதவிரோதமான துண்டுப்பிரசுரங்களை எங்கும் பரப்பவேண்டும்

ரோமன்கதலிக் மதத்தையும்பிராடஸ்டண்டு மதத்தையும் எதிர்ப்பதோடு நிற்கக்கூடாது. உலகத்திலுள்ள எல்லா மதங்களையும் எதிர்க்கவேண்டும். மத [illegible]ாம் பொய் என்று விளக்கக்கூடிய புத்தக [illegible] வெளியாக வேண்டும்:

இவ் வேலைக்கு[illegible] செலவுகளை ருஷிய நாஸ்திக செண்டிரல் கமிட்டியார் ஏற்றுக்கொள்வார்கள்.

***

தமிழ் உற்பத்தி:—தமிழ்ப் பாஷையானது ஆதிகாலத்தில் உற்பத்தியானதா, என்று ஆராயுங்கால் நித்தியமாகிய ஆன்மா உடம்பை எக்காலம் பற்றியதோ அக்காலத்திலே நந்தமிழ்ப்பாஷையும் தோற்றியதென்று சொல்லத் தகும். அதாவது 'அ' என்னும் அகராதிய முதல் அக்கரத்தைத் தலைமையாகக் கொண்ட பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் 'க்' ககர முதலாகிய பதினெட்டு மெய் யக்காரங்களும் கலந்து தமிழ்ப்பாஷை வரி வடிவத்தில் விளங்கி நிற்பினும், மேற்படி உயிரெழுத்துப் பன்னிரண்டாயிருப்பினும், ஆன்மாவின் எழுவகைத் தோற்றம் போலவே உயிரெழுத்தும் எழுவகைத் தோற்றமாயிருக்கிறது. அவை முறையே 'அ, இ, உ, எ, ஐ, ஒ, ஔ' ஆகிய இந்த ஏழு அக்கரங்களும் ஒலிவடிவத்திலும் ஆன்ம தோற்றத்தைப்போல எழுவகையாகவே காணப்படுகின்றன. பின்வரும் ஏனைய ஐந்தெழுத்துக்களும் ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, தத்தம் இன உயிரெழுத்துக்களுடன் ஓசை பற்றி நீண்டு நிற்கின்றன. ஆய்த எழுத்தாகிய ஃ என்பது ஒலி வடிவாயும் உரு வடிவாயும் எல்லா எழுத்துக்களிலும் கலந்து நின்று பக்குவத்துக்கேற்றவாறுக இச்சா, கிரியா, ஞான சத்திகள் ஆன்மாக்களிடம் விளங்கித் தொழில்படுதல் போலாகின்றது.

ஆகவே நால்வகைப்பிறப்பும் எழுவகைத்தோற்றமும் எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதத்தையுங் கொண்டு ஆன்மாவானது பிறந்து திகழ்வதுபோலவே நந்தமிழ் அக்கரங்களும் அகர முதல் எழுவகை உயிரெழுத்துக்களும் நால்வகைப் பிறப்பு எழுவகைத் தோற்றம், எண்பத்து நூறாயிர சீவர்கள் (யோனி பேதம்) போன்று நந்தமிழை விளக்கி நிற்கின்றதெனப் புலப்படுகின்றது.

***

தோல் பகீரதி:—காசி இந்து கலாசாலையில் சரித்திர ஆராய்ச்சியாளரான பண்டிதர் ஜீவன்ராம் என்பவர், செய்த பிரசங்க மொன்றில் கூறியதாவது:—"கங்கை நதி இமயமலையில் உற்பத்தியாகின்றதெனச் சொல்லப்படுகின்றது. ஆனால் இமயமலை இருந்தவிடத்தில் கடல் இருந்த காலத்திலேயும் கங்கை ஓடிக்கொண்டிருந்ததாகத்தெரிகின்றது. இமயமலை பல்லாயிராண்டுகளுக்குமுன் தோன்றியதாகும். இம்மலை தோன்றிய பின் கங்கையின் கதி மாறியிருக்கவேண்டும். இமயமலைக்கு முன் அது தெற்கிலிருந்து வடமுகமாய் சென்றது."

***

மத்திய இராமகிருஷ்ண மடத்தார், இமயமலையில் உள்ள புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போகிறவர்களின் வசதிக்காக அனேக இடங்களில் விடுதிகள் அமைத்திருக்கின்றனர். இமயமலை உச்சியில் கைலாஸ மலையருகில் இராமகிருஷ்ண தபோவனம் என்ற விடுதிச்சாலை யொன்று மடத்தாரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத் தபோவனத்தில் யாத்திரைகாரர் வசதிக்காகப் பல விடுதிகளும், ஒரு வைத்தியசாலையுமிருக்கின்றனவாம். இன்னும் சில விடுதிகள் கட்டப்படுவதற்குப் பொருளுதவி தேவையென மடத்தார் [illegible] கொள்கின்றனர்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
188934
ணை2l, N28 KA
N31·4

KALANILAYAI
REG. No., M 2324.

:வைத்
பண்டிட் D.கோபால ...ர்களின்
ESTD 1898
ஜீவாம்ருதம்

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.
எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரு 3-4-0
ஆயுர்வேதாஸ்ரமம்
தபாற் பெட்டி. 287. மதருஸ்.
கேட்லாக் இனம்

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0
காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0
தமிழ்-தமிழ்-ஆங்கிலம்
வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலாநிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

:: உயர்தரமாய்ச் செய்திருக்கிறார்கள் ::
அப்படித்தானென ருசுப்படுத்துவது உங்கள் கடன்!

இன்றைக்கு ஒரு கட்டியாவது இரு கட்டிகளடங்கிய ஒரு பெட்டியாவது வாங்குக!

டாக்டர் ட்ராலியின்

- லயன் சோப் -

அதைப்பற்றிச் சொல்லப்படுவ தெல்லாம் உண்மையா வென்பதை நீங்களே பரீக்ஷித்துப் பாருங்கள். இது நல்ல முறையான விண்ணப்பம். பெயரை ஞாபகமாக வைத்துக்கொள்ளுங்கள்.

:: எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும் ::

சோல் ஏஜண்ட்,

அ. வீர. அ. அடைக்கப்ப செட்டியார்,
52, பந்தர் தெரு மதராஸ்.

முத்தும் பவழமும்

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் — விலை அணா 8.
சுகுணவதி அல்லது மணம்போல மாங்கலியம் — விலை ரூபா 1.

எளிய நடையில் எழுதப்பட்ட இனிய தமிழ்ப் புத்தகங்கள். அழகிய டபல் ஆட்டோன் படங்கள். உயரிய பெதர்வெய்ட் காகிதம். யாவரும் படித்து இன்பமடையவேண்டுமென்றே குறைந்தவிலை வைக்கப்பட்டுளது.
விலாசம்:—ஸ்ரீ கிருஷ்ணா டப்ளிஷிங் ஹௌஸ், மயிலாப்பூர், மதராஸ்.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ., புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)

KALANILAYAM.
REG. NO., M 2324.

:வைத்.. பண்டிட். D.கோபால ...யர்களின்

ESTD 1898 "ஜீவாம்ருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரு 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபால் பெட்டி. 287. மதுரூஸ்.

கேட்லாக் இனம்

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலாநிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

:: உயர்தரமாய்ச் செய்திருக்கிறார்கள் ::
அப்படித்தானென ருசுப்படுத்துவது உங்கள் கடன்!

இன்றைக்கு ஒரு கட்டியாவது இரு கட்டிகளடங்கிய ஒரு பெட்டியாவது வாங்குக!

டாக்டர் ட்ராலியின்

- லயன் சோப் -

அதைப்பற்றிச் சொல்லப்படுவ தெல்லாம் உண்மையா வென்பதை நீங்களே பரீக்ஷித்துப் பாருங்கள். இது நல்ல முறையான விண்ணப்பம். பெயரை ஞாபகமாக வைத்துக்கொள்ளுங்கள்.

:: எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும் ::

சேரல் ஏஜண்ட்,

அ. வீர. அ. அடைக்கப்ப செட்டியார்,
52, பந்தர் தெரு மதராஸ்.

முத்தும் பவழமும்

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் — விலை அணு 8.

சுகுணவதி அல்லது மணம்போல மாங்கலியம் — விலை ரூபா 1.

எளிய நடையில் எழுதப்பட்ட இனிய தமிழ்ப் புத்தகங்கள். அழகிய டல ஆட்டோன் படங்கள். உயரிய பெதர்வெய்ட் காகிதம். யாவரும் படித்து இன்பமடையவேண்டுமென்றே குறைந்தவிலை வைக்கப்பட்டுளது.
விலாசம்:—ஸ்ரீ கிருஷ்ண டட்ளிஷிங் ஹௌஸ், மயிலாப்பூர், மதராஸ்.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ., புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)